பக்கங்கள்:-28

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மார்கழி 03 | சனிக்கிழமை | 20.12.2025 | அதிர்வு 142

## குறைநிரப்பு பிரேரணைக்கு நாடாளுமன்றம் அங்கீகாரம்



அரசால் சமர்ப்பிக்கப்பட்ட 500 பில்லியன் ரூபா குறைநிரப்பு மதிப்பீட்டுக்கு நாடாளுமன்றம் நேற்று

06

# மக்களுக்கு உதவி கிடைக்கவில்லையெனில் இரு மாதங்களில் வீடு வீடாகச் செல்லுங்கள்!

## இப்போதைக்கு அனர்த்த முகாமைத்துவக் குழுக் கூட்டத்துக்கு வாருங்கள் என்று எதிர்க்கட்சிகளிடம் ஜனாதிபதி வேண்டுகோள்




“எதிர்க்கட்சி உறுப்பினர்களே! பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி கிடைக்கவில்லை என்றால், இன்னும் இரண்டு மாதங்களில் வீடு வீடாகச் செல்லுங்கள். இப்போதைக்கு அனர்த்த முகாமைத்துவக் குழுக் கூட்டத்துக்கு வாருங்கள். மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்காகவே 500 பில்லியன் ரூபா குறைநிரப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 700 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.”

- இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

09

# இலங்கைக்கான இந்தியாவின் உதவி தொடரும்!

## நளிந்தவிடம் அந்நாட்டு இணை அமைச்சர் உறுதி

சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் இந்திய மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் அனுப்ரியா படேல் ஆகியோருக்கு இடையேயான சந்திப்பு நேற்றுக் காலை புதுடில்லியில் நடைபெற்றது.

உலக சுகாதார அமைப்பின் பாரம்பரிய மருத்துவம் குறித்த இரண்டாவது உலகளாவிய உச்சி மாநாட்டுடன் இணைந்து இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையேயான தற்போதைய இராஜதந்திர மற்றும் சுகாதார ஒத்துழைப்பு,அத்துடன்வரும்ஆண்டுகளில்இருநாடுகளுக்கும் இடையே இணக்கப்பாட்டை மேலும் மேம்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

12






அரசமைப்புக் கவுன்ஸிலின் உறுப்பினர்கள் தங்கள் சக உறுப்பினர் ஒருவரின் நடவடிக்கையை ஒட்டித் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்கள் எனத் தெரிய வந்தது. என்ன, ஏது என்று விசாரித்துப் பார்த்தேன்.

இரண்டொரு தினங்களுக்கு முன்னர் நாட்டின் புதிய கணக்காய்வாளர் நாயகம் ஒருவரை நியமிப்பதற்காக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க மூன்றாவது தடவையாக பரிந்துரைத்த நபரையும் அரசமைப்பு கவுன்ஸில் நிராகரித்துவிட்டது என்பது பற்றிய செய்தியை – தகவலை – இப்பத்தியில் தெரிவித்திருந்தேன்.

இலங்கை இராணுவத்தில் கணக்காய்வுப் பிரிவில் இயக்குநராகப் பணியாற்றி மிக அண்மையில் ஓய்வு பெற்ற கேணல் ஓ.ஆர். ராஜசிங்க என்பவரை நாட்டின் கணக்காய்வாளர் பதவிக்கு ஜனாதிபதி பரிந்துரைத்தார் என்றும், அதனை கவுன்ஸிலின் சிவில் சமூக பிரதிநிதிகள் மூவரும், எதிர்க்கட்சிகளின் இரண்டு பிரதிநிதிகளும் சேர்ந்து எதிர்த்து, அந்தப் பரிந்துரையையும்

06

20 ஆவது வருடத்தில்
Tamil one TV
Voice of Tamil Canadians

ஒன்றாக முன்னோக்கி

Tamil one TVஇன் பயணத்திற்கு தொடர்ந்து ஆதரவு வழங்கிவரும் அனைவருக்கும் நன்றி

அடுத்த தசாப்தத்திற்கான பயணத்தில் ஊடகப் பங்காளர்களாக,
கல்வி | வறுமை ஒழிப்பு | பொருளாதாரம் | அரசியல் | விளையாட்டு | கலை | கலாசாரம்
என்பவற்றில் 'ஒன்றாக முன்னோக்கி' செல்ல நாம் ஒன்றிணைவோம்.

Vision 2030- ஒன்றாக முன்னோக்கி | tamil one | முரசு | வணக்கம் | Ceylon MURASU | VTV

# ஆலங்குடா அபிவிருத்தி உத்தியோகத்தர் கடமை நேரத்தில் மோசமாகத் தாக்கப்பட்டார்

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

கற்பிட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஆலங்குடா கிராம சேவையாளர் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இனந்தெரியாத காடையார்களால் இரு முறை தாக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அண்மையில் நாட்டில் ஏற்பட்ட அனார்த்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான அரசின் நிவாரண உலர் உணவு பொதிகள் வழங்கும் கடமையில் வியாழக்கிழமை இரவு ஆலங்குடா அபிவிருத்தி உத்தியோகத்தர் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை காடையர்கள் சிலர் அத்துமீறி உள்ளே நுழைந்து தன்னை தாக்கினர் எனவும் அதன் காரணமாக காயமடைந்த தான் தற்போது புத்தளம் தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் ஆலங்குடா அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதியப்பட்டுள்ளது.



# வெற்றிலை மென்று எச்சில் துப்பிய மூவருக்கு புதுக்குடியிருப்பில் ஏழாயிரம் ரூபா அபராதம்!

**(பா.சதீசன்)**

புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட புதுக்குடியிருப்பு சந்தை வளாகத்தில், மக்கள் நடமாடும் பொது இடத்தில் வெற்றிலை மென்று எச்சில் உமிழ்ந்து துப்பிய மூவருக்கு 7,000 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு சந்தையில் பொது இடத்தில் வெற்றிலை மென்று எச்சில் உமிழ்ந்த மீன் வியாபாரம் செய்த ஒருவரும், பொது மக்களான இருவரும் அடங்கலாக மூவருக்கு எதிராக, புதுக்குடியிருப்பு பொது சுகாதார பரிசோதகரால் நேற்று (வெள்ளிக்கிழமை) மேலதிக நீதுவான் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அந்த வழக்குகள் நேற்றைய தினமே விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டன.

விசாரணையின் முடிவில், குற்றம் சாட்டப்பட்ட மூவரையும் குற்றவாளிகளாக இனங்கண்ட முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம், மீன் வியாபாரம் செய்த ஒருவருக்கு 5,000 ரூபாவும், ஏனைய இருவருக்கு தலா 1000 ரூபா வீதமும் தண்டம் விதித்தது. இதன் மூலம் மொத்தமாக 7,000 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் எதிர்காலத்தில் இதுபோன்ற குற்றங்களில் ஈடுபடும் பட்சத்தில், குறிப்பிட்ட காலம் சமூக சேவை செய்ய வேண்டிய நிலை ஏற்படும் எனவும் நீதிமன்றம் எச்சரிக்கை செய்து தீர்ப்பளித்துள்ளது.









# சாயி நிலையத்தில் சத்சங்க உரை

சென்னை, அயனாவரம் சாயி தியானாலய பீடத்தின் குரு யோகி ஸ்ரீராம் பாபாவின் சத்சங்க உரை,நேற்று முன் தினம் வியாழக்கிழமையன்று, கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி நிலையத்தில், பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது, சொற்பொழிவாளரை பிரதம அறங்காவலர் பாராட்டி கௌரவித்தார். நிகழ்வில், நிலையத்தின் பொதுச் செயலாளர் சிவா இராஜஜோதியும் பங்கேற்றார். கலந்து கொண்ட பக்தர்களையும் படத்தில் காணலாம்.



# கந்தளாய் நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் நேற்று திறக்கப்பட்டமையால் பல இடங்களில் வெள்ளம்!



**(எஸ்.கீதபொன்கலன்)**

நேற்று கந்தளாய் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டமையால் நேற்று மாலை முதல் கிண்ணியா – சூரங்கல் ஆயிலியடி வீதியை மேவி வெள்ளம் பாய்கின்றது.

அத்துடன் இப் பகுதியில் உள்ள சில குடியிருப்புகளிலும் வெள்ள நீர் புகுந்துள்ளது

# மூத்த பத்திரிகையாளர் தேவராஜா காலமானார்



முன்னாள் உதைபந்தாட்ட வீரரும் பத்திரிகையாளருமான தேவராஜா காலமானார்.

தினக்குரல், ஈழநாடு பத்திரிகைகளின் முன்னாள் விளையாட்டுத்துறை ஊடகவியலாளரும், படப்பிடிப்பாளருமான அந்தோனிப்பிள்ளை தேவராஜா (85-வயது) கடந்த புதன்கிழமை கனடாவில் காலமானார்.

யாழ்ப்பாணம் கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகத்தின் சிரேஷ்ட உதைபந்தாட்ட வவீரரான தேவராஜா அந்தோனிப்பிள்ளை யாழ்ப்பாண மாவட்ட அணியின் முன்னாள் உப தலைவர் என்பதுடன் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக், யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் என்பவற்றின் முன்னாள் தலைவருமாவார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான, அன்னாரின் பூதவுடல் நேற்று வெள்ளிக்கிழமையும், இன்று சனிக்கிழமையும் கனடா Chapel Ridge Funeral Home 8911 Woodbine Avenue வில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு இன்று சனிக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் Christ the King Catholic Cemetery 7770 Steeles Avenue EastMarkham, Ontario L6B 1A8 வில் நல்லடக்கம் இடம்பெறவுள்ளது.





# பால் பவுஸர் வீதியை விட்டு விலகி விபத்தில்

(உடப்பு க.மகாதேவன்)

மகியங்கனை – பிபில வீதியின் ரீதிமாலியத்த 8 ஆவது கிலோமீட்டர் பகுதியில், பால் பவுஸர் ஒன்று நேற்று அதிகாலை 3 மணியளவில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில், அதன் சாரதி பலத்த காயமடைந்தார். அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.



# இன்றுவரை ஆட்சி செய்த அனைவருமே பேரிடர் பேரனர்த்தத்திற்குப் பொறுப்பு!

## சத்தியலிங்கம் எம்.பி. நாடாளுமன்றத்தில் காட்டம்

இயற்கையைத் துஷ்பிரயோகம் செய்ததால் ஏற்பட்ட விளைவே அண்மையில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தமாகும்.

இதற்கு நாட்டை ஆட்சி செய்த அனைத்து அரசாங்கங்களினதும் அனர்த்தம் தொடர்பிலான முன்னாயத்தம் இல்லாமையே காரணம். அதில் தற்போதைய அரசிற்கும் பங்குள்ளது. அவர்களும் அந்த பணியை செய்யவில்லையென இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விசேட அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முதலில் அண்மைய பேரிடரினால் இறந்தவர்களுக்கு என்னுடைய அஞ்சலியைச் செலுத்துகின்றேன். அதேபோல இந்த அனர்த்தத்திலே தங்களுடைய குடும்ப உறுப்பினர்களை இழந்த குடும்பங்களது உறவுகளுடன் துயர் பகிர்கின்றேன்.

இந்தப் பேரழிவு என்பது இலங்கைக்கு முதல் தடவையாக வந்ததல்ல. கடந்த காலத்தில் இந்த நாட்டில் சூறாவளி, வரட்சி, கொள்ளை நோய்கள் பரவல், மண்சரிவு, வெள்ளம், எல்லாவற்றிற்கும் மேலாக 2004இல் சுனாமி எனப் பல அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன. சுனாமியால் எமது நாட்டில் மாத்திரம் கிட்டத்தட்ட 30,000 பேர் இறந்தார்கள். இந்த பேரிடராலே மக்கள் காயப்படுகின்றார்கள், இறக்கின்றார்கள், அவர்களது வாழ்வாதாரங்கள் இழக்கப்படுகின்றன, வீடுகள், உட்கட்டுமானங்கள் அழிவடைகின்றன.

அந்த வகையில் எமது வன்னி தேர்தல் தொகுதியை எடுத்துக்கொண்டால், எமது வாழ்வாதாரம் விவசாயமும் விலங்கு வேளாண்மையும்.

இந்தப் பேரிடரால் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் 30,000 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்கள் முற்றாக அழிந்திருக்கின்றன. சிறுதானிய பயிர்கள் அழிவடைந்திருக்கின்றன. மன்னார் மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 15,000 இற்கும் மேற்பட்ட மாடுகள் இறந்திருக்கின்றன. 30,000 இற்கும் மேற்பட்ட கோழிகள் இறந்திருக்கின்றன. வவுனியா, முல்லைத்தீவிலும் இதே நிலைமை. வீடுகள், உட்கட்டுமானங்கள் அழிந்துள்ளன. இது எமது வன்னி தொகுதிக்கு மாத்திரமல்ல. முழு இலங்கையிலும் நடந்துள்ளது.

உலக வங்கியின் தரவுகளின்படி ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட 380மில்லியன் அமெரிக்க டொலர் பேரிடர்களினால் இந்த நாட்டில் அழிக்கப்படுகின்றது. வெள்ளத்தால் மாத்திரம் ஒவ்வொரு வருடமும் 240 மில்லியன் டொலர் அழிக்கப்படுகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கம் பல நல்ல திட்டங்களை பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்ச்ஜனைகளை தீர்ப்பதற்கு அறிவித்துள்ளது. அதற்காக அரசைப் பாராட்டுகின்றோம். இந்த வேலைத் திட்டங்களில் அரசாங்கத்துடன் சேர்ந்து வேலைசெய்யத் தயாராக இருக்கின்றோம்.




ஆனால் அந்த இழப்பீடுகளை வழங்குவதில் பாரிய குறைபாடுகள் உள்ளமையை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இழப்புகளைப் பதிவு செய்து இழப்பீடுகளை வழங்க களப்பணியாற்றும் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை பாரிய பிரச்சினையாகவுள்ளது.

அதேபோல இங்கு ஒரு பாரிய கட்சி அரசியலும் செய்யப்படுகின்றது. மக்களிடம் இருந்து மாலையை எதிர்பார்க்க மாட்டோம், சேவையை மட்டும் செய்வோம் என்றவர்கள் இன்று பட்டுவேட்டியும் மாலையுமாக புத்தகப்பைகள் வழங்கும் நிகழ்வுகளில் தோன்றுகிறார்கள். "பிரஜாசக்தி" என்னும் திட்டத்தினூடாக முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்ட விடயங்கள் இடம்பெறுகின்றன. இது ஒரு கட்சியின் நிர்வாக கட்டமைப்பாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. அதற்கு உதாரணமாக பல சம்பவங்களை எமது மாவட்டத்தில் சொல்லலாம். எனினும் இந்த துயரமான நேரத்தில் அவற்றை நான் ஒரு குற்றமாக முன்வைத்து பேச விரும்பவில்லை.

பல பேரிடர்களை சந்தித்திருக்கின்ற எமது நாட்டில் 2004 ஆம் ஆண்டு சுனாமிக்கு பின் 2005 ஆம் ஆண்டின் 13ம் இலக்க "இலங்கை பேரழிவு செயலாட்சி சட்டம்" என்கின்ற ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்த சட்டத்தால் உருவாக்கப்பட்ட "அனர்த்த முகாமைத்துவ சபை" ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கூட வேண்டும். அவ்வாறெனில் இதுவரைக்கும் 80 தடவைகள் அந்த அனர்த்த முகாமைத்துவ சபை கூடியிருக்க வேண்டும். ஆனால் 2018 ஆம் ஆண்டு வரையில் கிட்டத்தட்ட 13 வருடங்களில் 12 தடவைகள் மாத்திரமே இந்த சபை கூடியுள்ளது. அதாவது வருடத்திற்கு ஒரு தடவை. 2018 ஆம் ஆண்டிற்குப்பின் 7 ஆண்டுகளிற்கு பிறகு இந்த அரசாங்கத்தினால் கடந்த 08 ஆம் மாதம் ஜனாதிபதி தலைமையில் கூட்டப்பட்டது.

சட்டத்தின் பிரகாரம் 3 மாதத்திற்கு ஒரு தடவை இந்த் சபை கூட வேண்டும் என்பதால் பேரிடர் வந்ததோ இல்லையோ கடந்த 11 அஆம் மாதம் கூடியிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை.

பேரிடர் இருக்கின்றதோ இல்லையோ அபாய நிலையை குறைத்தல்( Disaster Mitigation), தயார்நிலையில் இருத்தல் (Preparedness), மீட்பு நடவடிக்கை (Response) மற்றும் மீண்டுவருதல் (Recovery) ஆகிய நான்கிலும் நாம் எவ்வளவு தயார் நிலையில் இருந்திருக்கின்றோம் என்றால், இந்த பேரிடரில் கூட அபாய நிலையை குறைத்தலை அல்லது ஆயத்த நிலையில் இருந்திருக்கிறோமா என்று பார்த்தால் இல்லை என்பதே பதிலாகும்.

மலை நாட்டில் ஒவ்வொரு முறையும் மண்சரிவு வருகின்றது, வெள்ள அனர்த்தம் வருகின்றது. இடம்பெயர்ந்த மக்களை வெள்ளம் முடிந்த பிற்பாடு நிலம் காய்ந்ததும் அதே இடத்தில் கொண்டுசென்று மீண்டும் குடியேற்றுவார்கள். இன்று அதன் பலனை நாம் பார்க்கக்கூடியதாக இருந்தது. எங்களுடைய மக்கள், உறவுகள் எவ்வளவோ பேர் இறந்திருக்கின்றார்கள். இந்தமுறை நடந்த பேரழிவில் கூட தயார்ப்படுத்தல் என்பது மிகவும் குறைந்த அளவிலேயே இருந்தது. நாங்கள் திட்டமிடல் செய்யவில்லை. பேரிடர் தொடர்பாக பல மில்லியன்களை செலவளித்து சர்வதேச நிறுவனங்கள் வழங்கிய பயிற்சிகளை ஏனையவர்களுக்கு வழங்கியிருக்கின்றோமா என்றால் இல்லை என்பதே மீண்டும் பதிலாகும்.

எங்களுடைய இந்த அனர்த்த முகாமைத்துவ பிரிவை எடுத்துப்பாருங்கள். அவர்கள் செயற்பட முடியாமல் உள்ளார்கள். கடுமையான ஊழியர் பற்றாக்குறை உள்ளது, நிரப்பப்படாத வெற்றிடங்கள் உள்ளன, ஒவ்வொரு மாகாணத்திற்கும் அனர்த்த முகாமைத்துவ பிரிவிற்கான பிரதிப்பணிப்பாளர் இருக்கிறார்களா? எங்கும் இல்லை. ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஓர் அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர் இருக்க வேண்டும். ஆனால் இல்லை. மாவட்டத்திற்கு ஒருவர் மாத்திரமே உள்ளார்.

கடந்த திங்கட்கிழமை நடந்த அனர்த்த முகாமைத்துவ சபை கூட்டத்திலே பல நல்ல விடயங்கள் முன்மொழியப்பட்டன. முக்கியமாக ஏற்கனவே உள்ள 13 ஆம் இலக்க 2005 ஆம் ஆண்டுச் சட்டத்தை தற்போதைய காலத்திற்கேற்ப திருத்தியமைப்பதற்கான முன்மொழிவு வைக்கப்பட்டுள்ளது. அதுவொரு நல்ல விடயம்.

அந்தவகையில் இந்த பேரழிவை தடுக்கக்கூடிய அபாய நிலையை குறைத்தல் (Mitigation), தயார்நிலையில் இருத்தல் (Preparedness)ஆகிய வழிமுறைகளை கையாண்டு தயார் நிலையில் நாம் இல்லையெனில் இவ்வாறான பேரழிவுகள் தொடர்ந்தும் நடக்கத்தான் போகின்றன, எனவே நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்கள் என நம்புகிறேன்.

இந்த வருடம் நடந்த பேரழிவால், என்னுடைய மாவட்டத்தைப் பார்த்தால் சில கிராமங்கள் திரும்ப திரும்ப அழிவுகளைச் சந்தித்திருக்கின்றன. இங்கே கந்தசாமிநகர் கிராமத்தை உதாரணமாகக் குறிப்பிடலாம். அதேபோல் முல்லைத்தீவு மாவட்டத்திலும் கிராமங்கள் உள்ளன. மன்னாரிலும் அவ்வாறான நிறையக் கிராமங்கள் உள்ளன. தயவுசெய்து அவர்களை மீண்டும் அந்த இடத்திற்கு அனுப்பாதீர்கள். மீண்டும் பாதிப்பிற்கு உட்படாத வகையில் பொருத்தமான இடத்தை அடையாளம்கண்டு அவர்களை மீள்குடியேற்ற நடவடிக்கை எடுங்கள், பொருத்தமான வாழ்வாதாரத்தை அவர்களுக்கு கொடுங்கள். நீங்கள் செய்யும் அனைத்து நல்ல விடயங்களிலும் நாம் பங்காளர்களாக இருக்க தயாராக உள்ளோம். - எனத் தெரிவித்தார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிராகரிக்க வைத்தார்கள் என்றும் என் பத்தியில் கோடி காட்டி இருந்தேன்.

ஆயினும் இராணுவ அதிகாரி ஒருவரை நாட்டின் கணக்காய்வாளராக நியமிக்கும் ஜனாதிபதியின் அந்த பரிந்துரைக்கு ஆதரவாக கவுன்ஸிலின் அரசுத் தரப்பு உறுப்பினர்கள் மூவரும் கவுன்ஸிலில் இடம் பெற்றிருக்கும் தமிழ் உறுப்பினரான சிவஞானம் சிறிதரனும் வாக்களித்தார்கள் என்பதையும் குறிப்பிட்டு இருந்தேன்.

இராணுவ அதிகாரியை சிறிதரன் ஆதரித்து, அவர் சார்பாக வாக்களித்தார் என்ற பேச்சு தமிழ் மக்கள் தரப்பில் எரிச்சலோடு பேசப்படும் சூழ்நிலையில், நேற்று அந்த இராணுவ அதிகாரியின் நியமனத்துக்கான பரிந்துரை தொடர்பாகக் குறை கூறி, தாம் அந்தப் பரிந்துரையை எதிர்க்கின்றார் எனத் தெரிவித்து, அரசமைப்பு கவுன்ஸில் உறுப்பினர்களுக்கு சிறிதரன் ஒரு கடிதம் அனுப்பி வைத்திருக்கிறார். அதுவே கவுன்ஸில் உறுப்பினர்களின் சிண்டையைப் பிய்த்துக் கொள்ளும் சிக்கலாக இப்போது இருக்கின்றது.

முதல் நாள் அரசாங்கத் தரப்போடு சேர்ந்து இராணுவ அதிகாரிக்கு நாட்டின் கணக்காய்வாளர்நாயகம் பதவியை வழங்குவதற்கு அரசமைப்புக் கவுன்ஸிலில் ஆதரவு வழங்கிய சிறிதரன், நேற்றுத் தம் நிலைப்பாட்டை தலைகீழாக மாற்றிக் கொண்டு, அந்த நியமனத்தை தாம் எதிர்க்கிறார் என்று தெளிவுபடுத்தும் கடிதம் ஒன்றை அரசமைப்பு கவுன்ஸிலுக்கும் அதன் அங்கத்தவர்களுக்கும் அனுப்பி வைத்திருக்கிறார் என்று தெரிகின்றது.

ஆளுந்தரப்பை ஆதரிக்க வேண்டும் என்ற தமது கட்டாயம் கருதி இராணுவ அதிகாரி ஒருவரை கணக்காய்வாளர் நாயகமாக நியமிக்கவும் ஆதரவு தெரிவித்து அரசமைப்பு கவுன்ஸிலில் வாக்களித்த சிறிதரன், அடுத்த நாள் – அதாவது நேற்று – அந்த நியமனத்தைத் தான் எதிர்க்கிறார் என்று தெரிவிக்கும் கடிதங்களை கவுன்ஸில் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

'சணம் பித்தம், சணம் வாதம்' என்பது போல நிலைப்பாடு எடுத்து சிறிதரன் அனுப்பிய அத்தகைய கடிதம் அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினர்களுக்கு முகவரி இடப்பட்டிருந்தாலும், அது அவர்களுக்கு உரியது அல்ல, தமிழரசுக் கட்சியில் இந்த விவகாரம் உட்கட்சி எதிர்ப்பாக வெடிக்கும் போது, 'இல்லை, இல்லை, அந்த நியமனத்தை – இராணுவ அதிகாரியை கணக்காய்வாளர் நாயகமாக நியமிக்கும் பரிந்துரையை – நான் எதிர்த்துள்ளேன்' என்று காட்டுவதற்காகத்தான் – முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இத்தகைய கடிதத்தை சிறிதரன் இப்போது அனுப்பி இருப்பார் என்று தோன்றுகின்றது.

* * *

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டு அரங்கு அமைப்பதற்கு எதிராக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் விதித்த இடைக்காலக் கட்டாணை நேற்றுடன் முடிவடைந்தது. அதை நீதிமன்றம் நீடிக்கவில்லை.

இந்த இடைக்காலக் கட்டாணையைக் கடந்த தவணையில் இரண்டு வாரங்களுக்கு வழங்கியிருந்த யாழ். மாவட்ட நீதிபதி சுப்ரமணியம் சிவகுமாரன் நேற்று நீதிமன்றத்துக்குச் சொந்த விடுமுறை காரணமாக வரவில்லை. எனினும், நேற்றைய திகதியிட்டு இந்த வழக்கையொட்டி அவர் வழங்கிய உத்தரவு ஒன்றை பதில் நீதிபதி நீதிமன்றத்தில் வாசித்தார்.

அதிலேயே கட்டாணையை நீடிக்கும் உத்தரவு இல்லை என்பதை நீதிபதி தெளிவுபடுத்தி இருக்கிறார். இந்த நிலைமை வடக்கு மாகாணத்தின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் புதிய சட்ட வாதங்களை – சர்ச்சைகளை – உருவாக்கும் என்று தெரிகின்றது.

இத்தகைய வழக்குகளில் நீதிமன்றம் வழங்கக்கூடிய உத்தரவு தொடர்பில் இரண்டு விதமான சட்டச் சொல்லாடல்கள் இருக்கின்றன.

ஒன்று – நீதிமன்றம் வழங்கும் 'இடைக்காலத் தடை உத்தரவு'. அது வழமையாக இரு தரப்பு விவாதங்களையும் செவிமடுத்த பின்னர் – வழக்கு விசாரணை முடியும் வரை – நீதிமன்றம் வழங்குவது.

அப்படி இல்லாமல் ஒரு தரப்பின் – அதாவது வழக்காளியின் – பக்க வாதத்தை மாத்திரம் செவிமடுத்து, அதன் அடிப்படையில் நீதிமன்றம் வழங்குவது. அது நீதிமன்றின் 'கட்டாணை' என்று கூறப்படுகின்றது.

வழமையாக நீதிமன்றம் ஒரு தரப்பு வாதத்தோடு கட்டாணை பிறப்பித்தால், விசாரணை முடியும் வரை இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை அதை நீதிமன்றமே நீடிக்கும்.

இப்போது கட்டணையை மாவட்ட நீதிமன்றம் நீடிக்கவில்லை. அதே நேரம் நீதிபதி நேற்று நீதிமன்றத்திற்கு வராதமையால் இடைக்காலத் தடை உத்தரவுக் கோரிக்கைதொடர்பானவிடயமும்நிலுவையில் இருக்கின்றது. அது தொடர்பிலும் ஒரு முடிவு எடுக்கப்படவில்லை.

வழமையாக ஒரு தரப்பு வாதத்தைச் செவிமடுத்து கட்டாணையை விடுக்கும் நீதிபதி, பின்னர் மறு தரப்பின் வாதத்தை செவிமடுத்து, தமக்கு திருப்தி ஏற்பட்டால் கட்டாணை வழங்கிய தமது முன்னைய முடிவை விலக்கிக் கொள்வார். அத்தகைய நிலையில் தொடர்ந்து கட்டாணை நீடிப்பை வழங்க மாட்டார். இதுதான் வழமையான ஒழுங்கு.

ஆனால், இந்த வழக்கில் புதிதாக எந்தத் தரப்பினரதும் வாதங்களையும் உள்வாங்காமலேயே நீதிபதி தம்பாட்டில் கட்டாணையை நீடிக்காத முடிவை இப்போது எடுத்து இருக்கிறார். அதற்கு சில சட்ட தொழில்நுட்ப நெருக்கடிகள் காரணம் என்று அவர் அந்த உத்தரவில் காரனம் கூறி இருக்கிறார். இன்னொரு தரப்பின் வாதம் அல்லது சமர்ப்பணம் இல்லாமல் அப்படி நீதிபதி முடிவு எடுக்கலாமா என்று கேட்டால், ஆம் அதற்கு சட்டத்தில் இடமுண்டு என்பது மறுக்க முடியாத விடயமாகும்.

அதேநேரம் நேற்று நீதிபதி விடுமுறையில் இருக்க, நேற்றைய தினம் அவர் திகதியிட்டு ஒப்பமிட்ட ஓர் உத்தரவே கட்டாணையை நீடிப்பதில்லை என்ற அவரது கட்டளை. சட்ட ரீதியாகத் தாம் விடுமுறையில் இருக்கும் நாளில் அவர் வழங்கும் உத்தரவு அல்லது அவரது கட்டளை சட்டரீதியாகச் செல்லுபடியாகுமா என்ற சர்ச்சையும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பிய்த்துதறப்படக்கூடிய வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது.

சரி. தடை உத்தரவு வழங்கும் தமது கட்டாணையை நீதிபதி நீடிக்காமல் விட்டிருக்கின்ற காரணத்தினால் யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டு அரங்குக்கான கட்டுமானம் ஆரம்பமாகுமா என்று கேட்டால் என்னைப் பொறுத்தவரை 'வரும்.ஆனால் வராது...!' என்ற பாணியில்தான் பதில் தர முடியும் என நினைக்கிறேன்.

ஏற்கனவே இந்த வழக்கில் மற்றொரு இடையீட்டு வழக்காளியாக யாழ்ப்பாணம் மாநகர சபையின் பிரதி முதல்வர் இமானுவேல் தயாளனை நீதிமன்றம் நேற்று ஏற்றுக் கொண்டு விட்டது. அது மாத்திரமல்ல, அது தொடர்பான அவரது மனுவின் பிரதிகள், இந்த வழக்கின் முதலாவது எதிராளியான யாழ் அரச அதிபருக்கும் ஏனையோருக்கும் வழங்கப்பட்டுள்ளன. அதில் இந்த உள்ளக விளையாட்டு அரங்கக் கட்டட நிர்மாணத்துக்கு அனுமதி அளிப்பதில்லை என்று யாழ் மாநகர சபை ஏகமனதாக தீர்மானித்திருப்பது பற்றிய விடயம் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது.

சம்பந்தப்பட்ட பிரதேசத்துக்குரிய உள்ளூராட்சி சபையின் அனுமதியின்றி இந்த விடயத்தில் சிமெந்தோடு சம்பந்தப்பட்ட கட்டுமான வேலைகளை அரச அதிபர் ஆரம்பிப்பாராயின் அதில் நெருக்கடி ஏற்பட அதிக வாய்ப்புகள் உண்டு. உள்ளூராட்சி சபையை நிராகரித்து, அதனை மீறி, நேரடியாக நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் அனுமதி பெற்று, இந்தக் கட்டுமான வேலைகளை யாழ் அரச அதிபரும் ஏனைய எதிராளிகளும் முன்னெடுப்பதாயினும் அதிலும் பல சிக்கல்கள் – நெருக்கடிகள் – இடர்பாடுகள் தாராளமாக உண்டு. அவை பற்றிப் பின்னர் ஒரு தடவை விளக்கம் தருகிறேன்.

ஆயினும், இன்றைய கட்டத்தில் நீதிமன்றக் கட்டாணை நீடிக்கப்படவில்லை என்ற துணிச்சலோடு யாழ் அரச அதிபர் இந்த விடயத்தில் காரியங்களை முன் கொண்டு செல்வாராயின், முன்னைய அரசுகளின் காலத்தில் அரச அதிகாரிகள் எடுத்த நடவடிக்கைகளுக்கு இந்த அரசின் காலத்தில் பதிலிறுக்க முடியாமல் அல்லல்படும் நிலைமை, பிற்காலத்தில் தமக்கும் ஏற்படாமல் போகாது என்பது இப்போதைய யாழ் அரச அதிபருக்கும் தெரிந்திருக்கும். ஆகவே இந்த விடயத்தில் போதிய சட்ட ஆலோசனைகள், காப்புகள் பெற்றுக் கொண்டுதான் அவர் விடயத்தைமுன்னெடுப்பார்என்றுநினைக்கிறேன்.

* * *

இன்னொரு சுவாரஸியமான வழக்குப் பற்றிய உள்ளகத் தகவல்கள் உண்டு. இன்று விடயங்கள் நீண்டு விட்டமையால் அவற்றை நாளை பார்ப்போமா?

## குறை நிரப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான நிதியைப் பெறும் நோக்கிலேயே குறைநிரப்பு பிரேரணை முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்தப் பிரேரணை பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவால் நேற்றுமுன்தினம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று முற்பகல் முதல் மாலை வரை பிரேரணை தொடர்பில் விவாதம் நடத்தப்பட்டது.

விவாதத்தின் முடிவில் வாக்கெடுப்பின்றி குறைநிரப்பு பிரேரணை அங்கீகரிக்கப்பட்டது.

20 ஆவது வருடத்தில்

# Tamil one TV

*Voice of Tamil Canadians*

# ஒன்றாக முன்னோக்கி

Tamil one TV இன் பயணத்திற்கு தொடர்ந்து ஆதரவு வழங்கிவரும் அனைவருக்கும் நன்றி

அடுத்த தசாப்தத்திற்கான பயணத்தில் ஊடகப் பங்காளர்களாக,

கல்வி | வறுமை ஒழிப்பு | பொருளாதாரம்

அரசியல் | விளையாட்டு | கலை | கலாசாரம்

என்பவற்றில் 'ஒன்றாக முன்னோக்கி' செல்ல நாம் ஒன்றிணைவோம்.

## Vision 2030- ஒன்றாக முன்னோக்கி

tamil one TV HD | முரசு | வணக்கம் | V தமிழ் | Ceylon MURASU | VTV HD

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீண்டும் தரமற்ற மருந்து

முன்னைய அரசுகளின் காலத்தில்தான்- ஹெகலிய றம்புக்வெல போன்றவர்கள் சுகாதார அமைச்சர்களாக இருந்த காலத்தில்தான் - பெரும் ஊழல் நடவடிக்கையாக தரக்குறைவான மருந்துகள் சுகாதார அமைச்சினால் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டன என்று பரவலாகக் கருத்து நிலை இருந்து வருகின்றது. ஆனால் இந்த அரசாங்கத்தின் காலத்திலும் அது தொடர்கதையாக நீடிப்பதாக இப்போது செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்த ஆண்டில் இதுவரை மொத்தம் 93 மருந்துகள் தரச் சோதனைகளில் தோல்வியடைந்துள்ளன என சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவு தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தரக்குறைவான மருந்துகளில் பெரும்பாலானவை இந்தியாவிலும் உள்நாட்டிலும் உற்பத்தி செய்யப்பட்டவை என்பதும் கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மீதமுள்ள மருந்துகள் சீனா, பாகிஸ்தான், ஜப்பான் மற்றும் பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளிலிருந்து நாட்டிற்கு வந்தவையாம்.

தரமற்றவை என அடையாளம் காணப்பட்ட மருந்துகளில், சில திரும்பப் பெறப்பட்டுள்ளன எனவும், சில மருந்துகளின் விநியோகம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

2017 ஆம் ஆண்டு முதல் ஒட்டுமொத்தமாக 600 மருந்துகள் தொடர்பில் தரக் குறைபாடுகள் பதிவாகியுள்ள நிலையில் இவ் விவகாரம் பொதுமக்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் மயக்க மருந்துடன் தொடர்புடைய இரு மரணங்கள் குறித்து விசாரணைகள் நடந்து வருவது இந்த விவகாரத்தை மீண்டும் பெரும் சர்ச்சைக்குள்ளாக்கியிருக்கின்றது.

தரமற்றதவை எனக் கண்டறியப்பட்ட சில மருந்துகள் தற்போது சந்தையிலிருந்து முழுமையாக அகற்றப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையில், தரமற்ற மருந்துகள் மற்றும் தடுப்பூசி இறக்குமதி செய்யப்பட்டமைக்கு சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பொறுப்பேற்க வேண்டும் என்றும், எனினும், அமைச்சர் தற்போது அந்தப் பொறுப்பிலிருந்து தப்பிக்க முயற்சித்து வருகிறார் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா குற்றம் சுமத்துகின்றார்.

“தற்போதைய அரசாங்கம் அறிமுகப்படுத்துவதாகக் கூறும் அரசியல் நெறிமுறைகளின்படி, சரியாக இருந்தால், சுகாதார அமைச்சர் இந்த நேரத்தில் தனது பதவியை இராஜினாமாச் செய்திருக்க வேண்டும்’’ என்று கூறும் அவர், தேவையானதகவல்களைப் பெற்ற பிறகு, சட்ட அடிப்படையில் சுகாதார அமைச்சருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள எதிர்ப்பார்க்கிறோம் என்றும் தெரிவித்திருக்கின்றார்.

இது விடயத்தில் நாட்டு மக்களுக்கு அரசு நிலைமையைத் தெளிவு படுத்த வேண்டும்.

# மக்களுக்கு உதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில்,

“அண்மைய வரலாற்றில் நாங்கள் முன்வைத்த பாரிய தொகை குறைநிரப்பு பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நீண்ட விவாதத்திற்குப் பிறகு கடந்த 5 ஆம் திகதி, 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட ஆவணத்தை இந்த நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினோம். ஆனால் மிகக் குறுகிய காலத்தில், மீண்டும் 500 பில்லியன் ரூபாவுக்கான குறைநிரப்பு பிரேரணையை சமர்ப்பிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

ஏற்பட்டுள்ள பேரழிவிலிருந்து இயல்பு வாழ்க்கையைமீட்டெடுக்கவும், நமது பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும் இதுபோன்ற குறைநிரப்பு பிரேரணை அவசியம் என்பதை இந்த பாராளுமன்றத்தில் உள்ள அனைவரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால், நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் இந்த 500 பில்லியன் ரூபா காரணமாக ஏப்ரல் மாதத்திற்குள் பொருளாதாரம் சரிந்துவிடும் என்று ஒரு கருத்தாடல் நடக்கின்றது.



இவ்வளவு பாரிய தொகை குறைநிரப்பு பிரேரணையை முன்வைப்பதன் மூலம் பொருளாதாரம் பெரும் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் என்ற சிலரின் கூற்றுகள் குறித்து நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

நாங்கள் நிதி ஒழுக்கத்துடனும், குறிக்கோளுடனும் மிகச் சிறப்பாகச் செயல்பட்ட அரசாங்கம். 2025 ஆம் ஆண்டை எடுத்துக்கொண்டால், இந்த ஆண்டு பொருளாதாரத் துறையில் பல முக்கியமான சாதனைகளை நாம் அடைந்துள்ளோம். உங்களுக்குத் தெரியும், நீண்ட காலமாக, திறைசேரிக் கணக்கு வங்கி மேலதிகப் பற்றுடனே இருந்தது. சில நேரங்களில் இந்த வங்கி மேலதிகப் பற்றுகளுக்கு 33%, 36% வட்டி செலுத்தப்பட்டது. 2018 ஆம் ஆண்டில், வங்கி மேலதிகப் பற்று 180 பில்லியனாக இருந்தது. 2019 இல், அது 274 பில்லியனாக இருந்தது. 2020 இல், இது 575 பில்லியனாகவும், 2021 இல், அது 821 பில்லியனாகவும் இருந்தது. அதாவது அரசாங்கத்தின் வங்கிக் கணக்கில் 821 பில்லியன் மேலதிகப் பற்று இருந்தது. ஆனால் 2025 நவம்பர் மாதத்திற்குள், நமது அரசாங்கத்தின் திறைசேரிக் கணக்கின் நேர்மறை மதிப்பு 1202 பில்லியனாக இருந்தது. இது கடந்த காலங்களுடன்

ஒப்பிடும்போது 2 டிரில்லியன் அதிகமாகும். இது நமது நாட்டின் பொருளாதாரத்தில் மிக முக்கியமான ஒரு புள்ளியாகும்.

அத்தகைய நிதி கையிருப்பு இல்லாமல், இன்று இந்த 500 பில்லியன் ரூபாவை ஒதுக்க முடியாது. எனவே, இந்த 500 பில்லியன் ரூபாவை நிறைவு செய்ய வேறு பல உத்திகளைக் கண்டுபிடிக்க வேண்டும்.

இரண்டாவதாக, நமது வருமானத்தை எடுத்துக் கொண்டால், 2007 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையின் மிக உயர்ந்த அரச வருமானமாக 15.9ூ 2025ஆம் ஆண்டில் ஈட்டியுள்ளது. மூன்றாவதாக, 1977 ஆண்டுக்குப் பின்னர் மிகக்குறைந்தவரவு-செலவுத்திட்டபற்றாக்குறையாக 4.5 வரவு - செலவுத் திட்ட பற்றாக்குறையை நாம் பதிவு செய்துள்ளோம். மேலும், வரவு - செலவுத் திட்ட இலக்குகளைப் பொறுத்தவரை, இந்த ஆண்டு இந்த நாட்டின் வரலாற்றில் வருமான இலக்குகளை மீறிய ஆண்டாக உள்ளது என்பதை நாம் அறிவோம்.

இந்த ஆண்டு, நாங்கள் 4960 பில்லியன்களை எதிர்பார்த்தோம், 2025 டிசம்பர் 15, க்குள், நாங்கள் 5125 பில்லியன்களை வருமானமாக ஈட்டியுள்ளோம். கடன் எல்லை அதிகரிக்காமல் வைத்திருக்கவும் முடிந்தது. 2026 வரவு - செலவுத் திட்டத்தை நாங்கள் முன்வைத்தபோது, 3800 பில்லியன் கடன் எல்லையை எதிர்பார்க்கிறோம் என்று கூறினோம், ஆனால் வரவு - செலவுத் திட்டம் மூலம் மேலும் 60 பில்லியன்களைக் குறைத்து 3740 பில்லியன் கடன் எல்லையைப் பேணுகின்றோம்.

எங்கள் கடன் எல்லை அதிகரிக்காமல் இந்த மேலதிக 500 பில்லியனை நாங்கள் பயன்படுத்துகிறோம். அது மிகவும் முக்கியமானது. எனவே, நீண்ட காலத்திற்குப் பிறகு, வரவுசெலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் கடன் எல்லைகளுக்குள் இருக்க முடிந்துள்ளது.

மேலும், 1950 இற்குப் பின்னர், எங்கள் முதன்மைக் கணக்கில் 06 முறை மட்டுமே மேலதிகம் ஏற்பட்டுள்ளது. 74 ஆண்டுகளில், முதன்மைக் கணக்கில் 06 முறை மேலதிகம் ஏற்பட்டுள்ளது, மேலும் அந்த 06 முறையும் 1ூ க்கும் குறைவாகவே உள்ளன. ஆனால் வரலாற்றில் முதல்முறையாக, இந்த ஆண்டு எங்கள் முதன்மைக் கணக்கு மேலதிக 3.8% ஆக பதிவாகியுள்ளது.

இலங்கையின் வரலாற்றில் வெளிநாட்டில் இருந்து மிக அதிகமான பணம் அனுப்புதல் இந்த ஆண்டு பெறப்படுகிறது. சுற்றுலா வருமானம் 2018 ஆம் ஆண்டில் சுமார் 3.8 பில்லியனாக இருந்தது. அதை விட அதிகமாக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். எமது பொருட்கள் மற்றும் சேவை ஏற்றுமதிகளிலிருந்து கிட்டத்தட்ட 18 பில்லியன் டொலர் வருமானத்தை ஈட்ட எதிர்பார்க்கிறோம். இந்த தரவுகளிலிருந்து, மிகவும் வலுவான நிதி முகாமைத்துவம் மற்றும் இலக்கு சார்ந்த பணிகளின் விளைவாக இந்த வெற்றியை நாங்கள் அடைந்துள்ளோம்.

ஆனால் பெரிய அதிர்ச்சிகளைத் தாங்கும் பொருளாதாரம் நம்மிடம் இருக்கவில்லை. ஒரு சிறிய அல்லது தவறான முடிவு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய ஒரு பொருளாதாரமே நம்மிடம் இருந்தது. எனவே, கடந்த 14-15 மாதங்களாக, நாங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருந்து, எந்தத் தவறும் செய்யாமல் மிக நுட்பமான அம்சங்களைக் கூட ஆய்வு செய்து, பொருளாதாரத்தை ஸ்திரத்தன்மைக்குக் கொண்டு வந்துள்ளோம். யாரும் அதை மறுக்க முடியாது, ஆனால் அவ்வாறான பொருளாதார ஸ்திரத்தன்மையில்தான் நாம் இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளோம். நாம்

இவ்வளவு பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் வலுவான நிலையில் இல்லாவிட்டால், இதை எதிர்கொள்ள முடியாது. இப்போது நாம் அடைந்துள்ள பொருளாதார ஸ்திரத்தன்மைதான் இதை எதிர்கொள்ளும் தைரியத்தையும் நம்பிக்கையையும் நமக்கு அளித்துள்ளது.

ஆனால், இத்தகைய பாதிப்பை தாங்கும் அளவுக்கு இந்தப் பொருளாதாரம் வளரவில்லை என்பது நமக்குத் தெரியும். வீழ்ச்சி அடைந்த நாட்டை படிப்படியாக மீண்டும் கட்டியெழுப்பும்போது, நமது பொருளாதாரத்திற்கு இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த பாதிப்பைத் தணிக்கத் தேவையான மிக நுட்பமான தலையீட்டை வழங்குவதன் மூலம் இந்தப் பொருளாதாரத்தை நிர்வகிக்க வேண்டும்.

ஆனால் ஒரு பொருளாதாரம் என்பது ஒரு கஞ்சனைப் போல எல்லாவற்றையும் குவித்து செல்வத்தைக் குவிப்பது அல்ல. ஒரு பொருளாதாரம் என்பது அதிலிருந்து ஏதேனும் நன்மை கிடைக்குமானால், அந்த நன்மை மக்களுக்குத் திரும்ப செல்ல வேண்டும் என்பதாகும்.

இல்லையெனில், திறைசேரியில் டிரில்லியன் கணக்கான மிகுதி இருப்பதாகச் சொல்வதில் மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை. எனவே, பொருளாதாரத்தில் நாம் அடையும் ஒரு சிறிய வெற்றி என்றாலும், அந்த வெற்றி மக்களுக்கு செல்ல வேண்டும்.

எனவே, இந்த அனர்த்த சூழ்நிலையில், மக்களுக்கு உதவி வழங்க நம்மிடம் இருந்த 1.2 டிரில்லியன் கையிருப்புக்களை நாம் பயன்படுத்த வேண்டும். அதை நாம் கைவிட மாட்டோம். அதிகாரத்தில் இருப்பவர்கள் பெரிய கரண்டிகளில் பகிர்ந்து கொண்ட வரலாறு நம் நாட்டில் உள்ளது. வீடுகள் எரிக்கப்பட்ட பிறகு எம்.பி.க்கள் மற்றும் அமைச்சர்களுக்கு இழப்பீடு வழங்கிய முறை நியாயமானதா? இந்த நாட்டில் எப்போதும் தாம் பெரிய பங்கைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு முன்னுதாரணமும் உள்ளது. அவர்கள் சிறிய கரண்டிகளில் மக்களுக்கு விநியோகிக்கிறார்கள். அரசாங்கத்திற்கு பணத்தை பெரிய கரண்டிகளால் விநியோகிக்க, நாம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை அமைக்கவில்லை. மக்களுக்கு நியாயமான நன்மைகளை வழங்குவதே எங்கள் நோக்கம். எனவே, இந்த பிரச்சினைகளில் இருந்து வெளியே வர மக்களுக்கு நியாயமான உதவிகளை வழங்க நாங்கள் தலையிட்டுள்ளோம்.

இந்த மக்கள் தங்கள்

10

# மக்களுக்கு உதவி...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி..)

வாழ்வாதாரத்தை மீண்டும் தொடங்கவும், நிலையான வாழ்க்கையை நடத்தவும் தேவையான ஆதரவை எவ்வாறு வழங்குவது என்பதே எங்கள் கொள்கை அணுகுமுறை. அதற்காக தான், நாங்கள் ரூ. 500 பில்லியன்களை எதிர்பார்க்கிறோம். அதன்படி, மொத்த ஒதுக்கீடுகளாக 700 பில்லியன் ரூபாய்க்கு மேல் ஒதுக்கியுள்ளோம். இது குறித்த மதிப்பீட்டைக் கொண்ட அறிக்கையை உலக வங்கி வரும் திங்கட்கிழமை எங்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையிலிருந்து சேதத்தின் மொத்த அளவைக் காணலாம்.

ஆனால் இங்கே நாங்கள் கவனம் செலுத்தும் சில விடயங்கள் உள்ளன.



கூடுதலாக 500 பில்லியன் சந்தைக்கு வரும்போது பணவீக்கத்தில் ஏற்படும் தாக்கத்தை நாங்கள் பரிசீலித்து வருகிறோம். அதன்படி, பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியில் செயல்திறனைக் கொண்டுவர வேண்டும். பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியில் வளர்ச்சியை அடைவதற்கு இந்தப் பணத்தில் கணிசமான தொகையை நாம் செலவிட வேண்டும்.

மேலும், 500 பில்லியன்கள் சந்தைக்கு வரும்போது, டொலர்களுக்கான தேவை ஓரளவு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. அதைப் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, நாம் எதிர்பார்த்த டொலர் வருமானத்தை விட கூடுதல் டொலர் வருமானத்தை ஈட்ட வேண்டும். இல்லையெனில், மாற்று விகிதத்தில் தாக்கம் ஏற்படும். அதைத் தடுக்க, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 200 மில்லியன் டொலர் உடனடி உதவியை எதிர்பார்க்கிறோம். சர்வதேச நாணய நிதியத்தின் சபை இன்று கூடுகிறது. எங்களுக்கு நியாயம் கிடைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இதற்காக உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இருந்து ஆதரவை நாங்கள் கோரியுள்ளோம். எனவே, 2026 திட்டத்தில் உள்ள தொகையை விட குறைந்தது 500 மில்லியன் டொலர்களை நாம் கூடுதலாக திரட்ட வேண்டும்.

எனவே, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதிலும், மாற்று விகிதத்தில் ஏற்படும் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதிலும் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம். இந்தப் பணத்தை ஒதுக்குவதற்கான திட்டத்தை நாங்கள் தயாரித்துள்ளோம். அதன்படி, நாங்கள் வழங்கும் நிவாரணப் பொதியின் முழு விடயத்தையும் நான் முன்வைக்கிறேன்.

அவசர அனர்த்த சூழ்நிலை முடிந்த பிறகு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகளை சுத்தம் செய்ய ரூ. 25,000 வழங்குதல். இந்த உதவித்தொகையை பெறுக்கொள்ளும் உரிமை அனைவருக்கும் உண்டு. ஆனால் இங்கு ஒரு சிக்கல் இருப்பதை நான் அறிவேன். இது கிராம உத்தியோகத்தர் உள்ளிட்ட அதிகாரிகளால் தீர்மானிக்கப்படுகிறது. அரசியல்வாதி இதை விநியோகிப்பவர் அல்லது தீர்மானிப்பவர் அல்ல, ஆனால் யாராவது அநீதியாக நடத்தப்பட்டிருந்தால், தகுதியான ஒருவர் அதைப் பெறவில்லை என்றால், அரசியல் அதிகாரம் அதைப் பரிசீலிக்கும். அதுதான் சரியான வழி. இல்லையெனில், அவர்கள் அரசியல் குழுக்களிடமிருந்து கையொப்பங்களைப் பெறுதல் போன்ற பொய்களைப் பரப்புகிறார்கள்.

நாம் தெளிவான அரச பொறிமுறை மூலம் ஒரு முறையான கட்டமைப்பை தயாரித்துள்ளோம். பல வேறுபாடுகள் இருப்பதால், இந்தத் தெரிவில் சிறிது தாமதம் ஏற்படுவது இயல்பானது. இது நாம் அனைவரும் அறிந்த உண்மை. இந்த உதவித்தொகை எந்தப் பிரிவினையும் இல்லாமல் வழங்கப்படுகிறது. தற்போது அறிவிக்கப்பட்டுள்ள தொகையின்படி, கிட்டத்தட்ட 65மூ வழங்கப்பட்டுள்ளது. சில மாவட்டங்களில், 90மூ மற்றும் 100% வழங்கப்பட்ட இடங்கள் உள்ளன.

மேலும் நாங்கள் கூடுதலாக 50,000 ரூபாயை வழங்குகிறோம். வீடு சேதமடைந்திருந்தால், தளபாடங்கள் சேதமடைந்தால், ஒவ்வொரு குடும்பத்திற்கும் சமையலறை உபகரணங்களைப் பெறுவதற்கு அந்த உதவித் தொகையை நாங்கள் வழங்குகிறோம். எந்த அரசாங்கமும் இந்த வழியில் செயல்படவில்லை. நாங்கள் இதை கொள்கை அடிப்படையில் வழங்குகிறோம்.

தற்போது தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்களின்படி, 6228 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. பகுதியளவு சேதமடைந்துள்ள NBRO அனுமதி வழங்காத 4543 வீடுகள் உள்ளன. சேதமடையாத ஆனால் NBRO அனுமதி வழங்காத 6877 வீடுகள் உள்ளன. அதாவது மொத்தம் 17,648 வீடுகள். நாம் முதலாவதாக இந்த 17,648 பேருக்கு ஜனவரி மாதம் முதல் 03 மாதங்கள் வரை ரூ. 50,000 உதவித்தொகை வழங்குவோம்.

பாதுகாப்பு முகாமில் வசிப்பது எவ்வளவு கடினமானது என்பதை நாங்கள் அறிவோம். எனவே, அவர்கள் மிக விரைவில் அந்த இடங்களிலிருந்து அகற்றப்பட்டு, வீட்டிற்குச் செல்ல நான் முன்னர் குறிப்பிட்ட 03 வகைகளின்படி ரூ. 25,000 வீட்டு வாடகை வழங்குவதே எங்கள் எதிர்பார்ப்பு. அவர்களின் உறவினர்கள் வீட்டில் இருந்தால், அவர்களுக்கு ரூ. 25,000 வழங்குவோம்.

மிக விரைவாக பயிர்ச்செய்கையை மீண்டும் தொடங்கவும் நாங்கள் முடிவு செய்துள்ளோம். நீர்ப்பாசனத் திணைக்களம், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் கமநல சேவைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான ஏராளமான நீர்த்தேக்கங்கள் சேதமடைந்தன. நாங்கள் மாவட்ட ரீதியாக சென்று அவற்றை விரைவில் மீட்டெடுப்பதன் அவசியத்தையும், இந்த பெரும்போகத்தின் தொடக்கத்திற்குத் தேவையான நீரை வழங்குவது பற்றியும் கலந்துராயாடினோம். பயிர்ச்செய்கைக்குத் தேவையான நிவாரணங்களையும் நாங்கள் வழங்குவோம்.

அதன்படி, நெல், சோளம், முந்திரி மற்றும் தானியங்களை பயிரிட்டிருந்தால், ஹெக்டேருக்கு 150,000 ரூபாய் உதவித்தொகை வழங்க முடிவு செய்துள்ளோம். சேதத்தின் அளவு குறைவாக இருந்தாலும், அவர்கள் மீண்டும் சுயமாக நிற்க நாம் தைரியம் வழங்க வேண்டும். ஒரு நபர் தங்கள் பயிர் நிலத்தை இழக்கும்போது ஏற்படும் வலியை நாம் அறிவோம். ஒரு சாதாரண விவசாயி விவசாயம் செய்யும்போது, தினமும் காலையில் வயலுக்குச் சென்று அறுவடையைப் பார்க்கிறார். மகிழ்ச்சி அடைகிறார். இது போன்ற பயிர் சேதத்தால் ஏற்படும் மன அழுத்தத்தை நாங்கள் அறிவோம். அடுத்த வாரத்திற்குள் உர மானியம் பெற்ற ஒவ்வொரு விவசாயியின் வங்கிக் கணக்குகளுக்கும் குறித்த பணத்தை வைப்பிலிட கமநல சேவைகள் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

அதேபோன்று, மிளகாய், வெங்காயம், பப்பாளி மற்றும் வாழை மரங்களை பயிரிட்டவர்களை காய்கறி பிரிவில் சேர்த்து, அவர்களுக்கு ஹெக்டேருக்கு ரூ.200,000 வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஏற்றுமதி விவசாயத் தரப்பிலிருந்து பல திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. அதன்படி, மிளகு, ஏலக்காய் மற்றும் 11

# மக்களுக்கு உதவி...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கோபிதோட்டங்களுக்கு இழப்பீடு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான அனைத்து தரவுகளையும் நாங்கள் வழங்கியுள்ளோம். அந்தத் தரவுகளின் அடிப்படையில், ஒரு மிளகுச் செடிக்கு ரூ. 250 செலுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் புதிய செடிகளை வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. கால்நடை வளர்ப்பு பிரச்சினை நாங்கள் எதிர்கொண்ட அடுத்த பாரிய பிரச்சினையாகும்.

நெல் வயலுக்கு ஒரு ஹெக்டேர் என்று ஒரு அளவீடு உள்ளது. காய்கறி பயிர்ச் செய்கைக்கு ஒரு ஏக்கர் என்று ஒரு அளவீடு உள்ளது. ஆனால் கால்நடை வளர்ப்புக்கு அத்தகைய அளவீடு இல்லை. எத்தனை விலங்குகள் உள்ளன? ஏராளமான விலங்கு வகைகள் உள்ளன. அது ஒரே வகை விலங்காக இருந்தாலும், பெரிய மற்றும் சிறிய அளவிலான விலங்குகள் உள்ளன. எனவே நிறைய பன்முகத் தன்மை உள்ளது. மேலும் நாம் கால்நடை அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும்.

பதிவு செய்யப்படாத கால்நடை வளர்ப்பு பற்றி நாம் தனியாக சிந்திக்க வேண்டும். முதல் கட்டமாக, பதிவு செய்யப்பட்டவற்றுக்கான திட்டங்களை நாங்கள் தயாரித்துள்ளோம்.

ஒரு கலப்பின மாடு தொலைந்தால், இரண்டு இலட்சம் ரூபாய் உதவி வழங்கப்படும். அதிகபட்சம் 10 மாடுகளுக்கு 20 இலட்சம் ரூபாய் உதவி வழங்கப்படும். கலப்பினமற்ற ஒவ்வொரு உள்ளூர் மாட்டுக்கும் 50,000 ரூபாய் உதவி வழங்கப்படும்.

அதிகபட்சமாக 20 மாடுகளுக்கு 10 இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்படும்.கால்நடைவளர்ப்பில்ஈடுபட்டுள்ளஒவ்வொரு விவசாயியின் முக்கிய நோக்கமும் கால்நடை அலுவலகத்தில் பதிவு செய்வதாக இருக்க வேண்டும். அவர்கள் குறைந்தபட்சம் ஒவ்வொரு 6 மாதங்களுக்கு ஒரு முறையேனும் தங்களிடம் உள்ள விலங்குகளின் எண்ணிக்கையை தெரிவிக்க வேண்டும். பதிவு செய்யப்படாத பண்ணைக்கு கால்நடை சேவைகள் வழங்கப்பட்டால், கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

இனிமேல், சேவைகளை இலவசமாக வழங்க முடியாது. பதிவு செய்யப்படாத விவசாயிகள் மாகாணத்திலிருந்து மாகாணத்திற்கு விலங்குகளை கொண்டு செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனவே, பதிவு அவசியம். இருப்பினும், பன்றிகள், ஆடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் ஆகிய மூன்று வகையான விலங்குகளில் ஒன்று காணாமல் போனால் ரூ. 20,000, வீதம் அதிகபட்சம் 20விலங்குகளுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, கால்நடை வளர்ப்பை மீண்டும் கட்டியெழுப்ப இதுபோன்ற திட்டங்களை நாங்கள் தயாரித்துள்ளோம்.

அடுத்து, கோழி வளர்ப்பில் பல வேறுபாடுகள் உள்ளன. இறந்த ஒரு லேயர் கோழிக்கும் ரூ. 500 வீதம் 2,000 கோழி வரை உதவி வழங்கப்படும். அதன்போது, 2,000 கோழிகள் இழந்தால், ஒரு மில்லியன் ரூபாய் வழங்கப்படும். ஒவ்வொரு பிராய்லர் கோழிக்கும் ரூ. 250 வீதம் , அதிகபட்சம் 4,000 கோழிகள் வரை உதவி வழங்கப்படும். விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கில் கோழிகளை வழங்கிய வீட்டுக் கோழி பண்ணைகள் அதிக எண்ணிக்கையில் உள்ளன. அவர்களுக்கு ரூ. 10,000 உதவி வழங்க முடிவு செய்துள்ளோம். மாகாண சபையிடமிருந்தும் நீங்கள் இலவசமாக குஞ்சுகளைப் பெறலாம்.

மீன்பிடித் தொழிலில் பல சிக்கல்கள் உள்ளன. கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்கள் தங்கள் படகுகளுக்கு காப்புறுதி செய்யாமல் தொழிலில் ஈடுபட முடியாது. அவர்களின் படகுகளுக்கு காப்புறுதி இருந்தால் மட்டுமே மீன்வள அமைச்சு மீன்பிடி அனுமதி பத்திரங்களை வழங்கும். கடலில் மீன் பிடிக்கும்



அனைவருக்கும் காப்புறுதி உள்ளது. காப்புறுதியில் இருந்து இழப்பீடு பெற்றாலும், புதிய படகு வாங்க காப்புறுதித் தொகை போதுமானதாக இல்லை. காப்புறுதியில் இருந்து கிடைக்கும் பணத்தை சினோர் நிறுவனத்திற்கு வழங்கவும், சினோர் நிறுவனம் மூலம் ஒரு புதிய படகை வழங்க நாம் தீர்மானித்துள்ளோம்.

வலை உட்பட உபகரணங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கான வவுச்சரை நாங்கள் வழங்குகிறோம். அந்த வவுச்சரை சினோர் நிறுவனத்திடம் கொடுத்த பிறகு, நீங்கள் வலை உட்பட உபகரணங்களைப் பெறலாம். மீன்பிடித் தொழிலை மீண்டும் மேம்படுத்த வேண்டும். மேலும், சினோர் நிறுவனம் சிறிது சேதமடைந்த படகுகளை இலவசமாக பழுதுபார்த்து தரும்.

மேலும், நன்னீர் மீன்பிடித் தொழிலில் பயன்படுத்தப்படும் ஒரு படகுக்கு ரூ. 100,000 தொகையும், மீன்பிடி சங்கம் மூலம் ஒரு வலைக்கு ரூ.15,000 வீதம், அதிகபட்சம் ஐந்து வலைகளுக்கு 75,000 ரூபாய் வழங்கப்படும். சில குளங்களில் உள்ள மீன் குஞ்சுகளில் சுமார் 35% நீரில் மூழ்கிவிட்டன. சில குளங்களில் அனைத்து மீன் குஞ்சுகளும் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. சேதமடைந்த நீர்த் தேக்கங்களுக்கு மீன்வள அமைச்சு இரண்டு சந்தர்ப்பங்களில் மீன் குஞ்சுகளை வழங்கும்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து ரூ.10,000 மற்றும் திறைசேரியிலிருந்து ரூ.15,000 வழங்கப்படும். புதிய பாடசாலை தவணை தொடங்குவதற்கு முன்பு பாடசாலை மாணவர்களுக்கு இந்த உதவித்தொகையை வழங்க நாங்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறோம்.

அனர்த்தத்தால் சேதமடைந்த வர்த்தகங்களை கைத்தொழில் அமைச்சில் பதிவு செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி, தனியுரிமை நிறுவனங்கள், சிறு வணிகங்கள் மற்றும் நுண் நிறுவனங்கள் என்று 9,600 வர்த்தகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தத் தொழில்களை மீண்டும் மீட்டெடுக்க இந்த 9,600 வணிகங்களுக்கும் தலா ரூ. 200,000 வழங்க முடிவு செய்துள்ளோம்.

வர்த்தகக் கட்டடங்களுக்கும் பெருமளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. பகுதியளவு சேதமடைந்த வர்த்தக இடத்திற்கு ஆரம்பத் தொகையாக ரூ. 05 இலட்சம் வழங்கப்படும். அது போதாது என்றால், மதிப்பீடு செய்யப்பட்டு அதிகபட்சமாக ரூ. 50 இலட்சம் வழங்கப்படும். அவர்களுக்கு ஏற்பட்ட சேதம் ரூ. 500,000 க்கு மேல் இருந்தால், ரூ. 500,000 உதவியைப் பெற்று மதிப்பிட முடியாது. அடுத்து, கைத்தொழில் அமைச்சில் பதிவு செய்யாத, பிரதேச செயலகங்களிலிருந்து வர்த்தக உரிமங்களைப் பெற்ற ஏராளமான சிறு வணிகர்கள் உள்ளனர். ஆனால் தரவு இன்னும் சேகரிக்கப்படவில்லை. எனவே, தரவுகளைச் சேகரிக்காமல் இன்னும் ஒரு முடிவை எடுக்க முடியாது.

ஆனால் கடையில் உள்ள அனைத்து பொருட்களும் அழிக்கப்பட்டால், வணிகத்தை மீண்டும் தொடங்க அரசாங்கம் ஆதரவளிக்க வேண்டும். அதற்கான தரவு இல்லாததால், மாவட்ட செயலாளர்கள் மூலம் பிரதேசத்தில் உள்ள வர்த்தக இடங்கள் குறித்த அறிக்கையைப் பெற்று, உதவித்தொகை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இறால் வளர்ப்பு போன்றவிலையுயர்ந்தபெரியஅளவிலான வணிகங்களுக்கு சலுகை கடன்களை வழங்க முடிவு செய்துள்ளோம். சிறு அளவிலான வணிகங்களுக்கு ரூ. 2.5 இலட்சம் முதல் 10 இலட்சம் வரையும் பாரிய அளவிலான வணிகங்களுக்கு அதிகபட்சம் ரூ. 250 இலட்சம் வரை கடன்கள் வழங்கப்படும். அரசாங்கம் கடன்களுக்கு வட்டி வசூலிப்பதில்லை.

நாங்கள் வங்கிகளுக்கு பணம் வழங்குகிறோம், மேலும் வங்கிகள் மூலம் கடன் திட்டங்களை செயல்படுத்துகிறோம். கடன் திட்டங்களை செயல்படுத்துவதில் சில நிர்வாக செலவுகள் உள்ளன. அந்த செலவை ஈடுகட்ட வங்கி ஒரு சிறிய வட்டியை வசூலிக்கிறது. கடனைப் பெற்ற பிறகு, ஆறு மாதங்களுக்குப் பிறகு கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். இந்த பேரழிவால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதே எங்கள் நோக்கம். அவர்களின் வாழ்க்கையை நாங்கள் கைவிட முடியாது. அனுமதி அற்ற நிர்மாணங்களை அகற்றுவதே எங்கள் நோக்கம்.

இந்த உதவியை வழங்குவதற்கு நமக்கு ஒரு காலக்கெடு தேவை. இது இன்று நிறைவேற்றப்பட்டாலும், திங்கட்கிழமைபணத்தைப்பற்றிகேட்கவேண்டாம். இந்த செயல்முறைகள் பிரதேச செயலகங்களில் நடைபெறுகின்றன. உண்மையான பிரச்சினைகளைத் தீர்க்க வழிகள் உள்ளன. உண்மையில்,

12

# 1.75 லட்சம் ஹெக்டேயர் விவசாய நிலங்கள் சேதம்

## உணவுப் பாதுகாப்பிற்கு கடும் அச்சுறுத்தல்



இலங்கையைத் தாக்கிய அண்மைய கடும் சூறாவளி மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக நாட்டின் மொத்த விவசாய நிலங்களில் 7.6 சதவீதமான (1,75,000 ஹெக்டேயர்) நிலப்பரப்பு முற்றாகச் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதுநாட்டின்அறுவடைமற்றும்உணவு உற்பத்தி மட்டத்தில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன், உள்ளூர் உணவுப் பொருள்களின் விலையேற்றத்திற்கும் வழிவகுத்துள்ளது. அனர்த்தத்தினால் நெற்பயிர்களே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

சுமார் 1.40 லட்சம் முதல் 1.50 லட்சம் ஹெக்டேயர் நெல் வயல்கள் அழிந்துள்ளன என மதிப்பிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகபட்சமாக 36,188 ஹெக்டேயர், திருகோணமலை மாவட்டத்தில் 22,155 ஹெக்டேயர், அனுராதபுரம் மாவட்டத்தில் 15,237 ஹெக்டேயர், மன்னார் மற்றும் குருநாகல் தலா 10,000 ஹெக்டேயருக்கும் அதிகமான நிலப்பரப்பு பாதிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 7,000 முதல் 8,000 ஹெக்டேயர் மரக்கறிச் செய்கை நிலங்கள் அழிந்துள்ளன.

இதில் நுவரெலியா (1,046 ஹெக்டேயர்) மற்றும் பதுளை (930 ஹெக்டேயர்) ஆகிய மாவட்டங்கள் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளன.

மேலும் அனுராதபுரம் (671 ஹெக்டேயர்), குருநாகல் (508 ஹெக்டேயர்), திருகோணமலை (498 ஹெக்டேயர்), மட்டக்களப்பு (454 ஹெக்டேயர்) மற்றும் புத்தளம் (430 ஹெக்டேயர்) ஆகிய மாவட்டங்களிலும் கணிசமான பயிர் இழப்புகள் பதிவாகியுள்ளன.

சோளம், மிளகாய், உழுந்து, பயறு போன்ற ஏனைய பயிர்கள் பயிரிடப்பட்ட சுமார் 18,000 முதல் 20,000 ஹெக்டேர் நிலப்பரப்பு நாடளாவிய ரீதியில் சேதமடைந்துள்ளது.

இந்தப் பிரிவில் அதிக பாதிப்பைச் சந்தித்த மாவட்டமாகப் அனுராதபுரம் பதிவாகியுள்ளது.

இங்கு சுமார் 3,478 ஹெக்டேயர் நிலப்பரப்பு அழிந்துள்ளது.

அடுத்ததாக வவுனியா மாவட்டத்தில் 2,747 ஹெக்டேயர் நிலப்பரப்பு பாதிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களிலும் தலா பல நூறு ஹெக்டேயர் பயிர்ச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

செயற்கைக்கோள் ஊடாகப் பெறப்பட்டதகவல்களின்படி, மன்னார், முல்லைத் தீவு, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் 13 முதல் 16 சதவீதமான நிலப்பரப்பு வெள்ள நீரில் மூழ்கியுள்ளமை உறுதி செய்யப் பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் தகவல்களுக்கு அமைய, ஏற்கனவே கிராமப்புற குடும்பங்களில் 38 சதவீதமானோர் கடன் சுமையில் சிக்கியுள்ள நிலையில், இந்த அனர்த்தம் அதனை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

பெரும் போகத்திற்காகப் பாரிய அளவில் கடன் பெற்று விவசாயம் செய்த விவசாயிகள், தற்போது அறுவடை அழிந்துள்ளதால் கடனை மீளச் செலுத்த முடியாமல் தவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட நிலங்களில் உடனடியாக மீள்-விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிக்காவிட்டால், இலங்கையின் உணவுப் பாதுகாப்பு பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் என விவசாயத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

## மக்களுக்கு உதவி...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதையெல்லாம் மக்களுக்கு வழங்க, எதிர்க்கட்சியின் ஆதரவும் தேவை. மக்கள் உதவி பெறவில்லை என்றால், இன்னும் இரண்டு மாதங்களுக்கு வீடு வீடாகச் செல்லுங்கள். இப்போதே அனர்த்த முகாமைத்துவக் குழு கூட்டத்திற்குச் செல்லுங்கள்.

நாங்கள் இதை படிப்படியாகத் தொடங்குகிறோம். முன்னர் குறிப்பிட்டபடி, மண் சரிவு பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள 17,648 குடும்பங்களுக்கு இந்த 50 இலட்சம் ரூபாய் உதவித்தொகையை வழங்குகிறோம். அவர்கள் அனைவரும் ஆபத்தான இடங்களிலிருந்து அகற்றப் படுவார்கள். 2027 ஆம் ஆண்டுக்குள், அதிக ஆபத்தான இடங்களில் எந்த குடும்பமும் வசிக்க முடியாத வகையில் சட்டங்கள் இயற்றப்படும். மேலும், வீடுகள் முழுமையாக சேதமடைந்தால், குருநாகல் போன்ற பகுதிகளில் குடியேற பொருத்தமான காணி உள்ளவர்களுக்கு 50 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

வீடுகள் கட்டுவதற்காக அரச நிலங்களை கையகப்படுத்துமாறு அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளோம். இந்த மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப ரூ. 500பில்லியன் குறைநிரப்பு பிரேரணயை நாங்கள் முன்வைத்துள்ளோம். இயற்கை பேரழிவுகளைத் தடுக்க முடியாது என்றாலும், இதுபோன்ற இயற்கை பேரழிவுகளால் ஏற்படக்கூடிய சேதங்களைத் தடுக்க ஒரு நீண்டகால திட்டம் தேவை. மத்திய மலை நாட்டை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு நீண்டகால திட்டம் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படும். எனவே, பல முறையான நடவடிக்கைகள் மூலம் நாங்கள் இதில் பிரவேசித்துள்ளோம்.

சேதமடைந்த வீதிக் கட்டமைப்பு, மின்சார கட்டமைப்பு மற்றும் நீர் வழங்கல் கட்டமைப்பை சீர்செய்ய நாங்கள் பணியாற்றி வருகிறோம். மின்சார கட்டமைப்பை மீட்டெடுக்கும் போது ஒரு தொழிலாளி இறந்தார். அடுத்த இலக்கு அனைத்து பாடசாலைகளையும் திறப்பது. ஒரு அரசாங்கமாக எங்கள் பொறுப்பை நாங்கள் நிறைவேற்றிவிட்டோம் என்று சொல்வதில் எங்களுக்கு திருப்தி இருக்கிறது. இந்த நாட்டை மீட்டெடுக்கும் பொறுப்பை நாங்கள் மிகவும் திட்டமிட்ட முறையில் நிறைவேற்றுகிறோம். நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும்." - என்றார்.

## இலங்கைக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியாவின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் திருமதி அனுப்ரியா படேல், இந்தியாவின் அண்டை அண்டை நாடுகளின் பட்டியலின் முதன்மையாக இலங்கை உள்ளது என்று தெரிவித்தார்.

டித்வா சூறாவளிக்குப் பிறகு நாட்டை வலுப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கைகளுக்கு இந்தியா இலங்கைக்கு ஆதரவளித்துள்ளது என்றும், எதிர்காலத்தில் உதவிகள் தொடரும் என்றும் திருமதி அனுப்ரியா படேல் தெரிவித்தார்.

இந்தியா - இலங்கை உறவுகள் வலுவானவை என்றும், சுகாதாரத் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு இந்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு இலங்கை நன்றி தெரிவிப்பதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டார்.

நாட்டைப் பாதித்த பேரிடர் சூழ்நிலையின் போது இந்திய அரசு வழங்கிய ஒத்துழைப்பை அமைச்சர் பாராட்டினார்.

மேலும் பேரிடர் சூழ்நிலைக்குப் பிறகு நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான எதிர்கால திட்டத்திற்குத் தேவையான ஆதரவையும், நாட்டில் சுகாதார சேவையின் எதிர்காலப் பணிகளை வலுப்படுத்த தகவல் தொழில்நுட்பத் திட்டத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான ஆதரவையும் அமைச்சர் மேலும் கேட்டுக்கொண்டார்.

கடந்த 17ஆம் திகதி தொடங்கிய உலக சுகாதார அமைப்பின் பாரம்பரிய மருத்துவம் குறித்த இரண்டாவது உலகளாவிய மாநாடு நேற்றுடன் நிறைவடைந்துள்ளது.



# தம்பலகாமத்தில் நேற்றுத் தீப்பரவல்

(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிராஜ் நகர் பகுதியில் தனியாருக்கு சொந்தமான ஹாட்வெயார் ஒன்று நேற்றுத் தீப்பற்றியுள்ளது.

இதனால் பல பொருள்கள் தீயில் நாசமடைந்துள்ளன. பிரதேசப் பொது மக்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

சம்பவ இடத்துக்கு திருகோணமலை தீயணைப்புப் பிரிவு வருகை தந்தது. மேலும் இலங்கை மின்சார சபையினரும் அங்கு வந்து அந்த பகுதிக்கான மின்சார விநியோகத்தைத் துண்டித்தனர்.

உயிர்ச் சேதம் எதுவும் இல்லை எனவும் தெரியவருகிறது.

எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் இந்தத் தீப்பரவல் இடம் பெற்றிருக்கலாம் என ஆரம்பகட்ட விசாரனை மூலம் தெரியவருகிறது.

மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

தம்பலகாமம் பிரதேச சபைக்கான தீயணைப்பு வாகனம் இன்மை பெரும் குறைபாடாக காணப்படுகிறது. தற்போது தீயணைப்பு வாகனத்தின் தேவை உணரப்படுகிறது.

திருகோணமலை மாநகர சபைக்கு சொந்தமான தீயணைப்பு வாகனம் சுமார் அரை மணி நேரத்திற்கு பின்தான் சம்பவ இடத்திற்கு வந்து சேர்ந்தது எனக் கூறப்படுகின்றது.







# தெற்கு அதிவேக சாலையில் இடம்பெற்ற விபத்தில் லொறியின் உதவியாளர் சாவு!

**(உடப்பு க.மகாதேவன்)**

தெற்கு அதிவேக சாலையின் 2ஆவது கிலோமீட்டரில் கல்லொளியின் அருகே, நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் லொறி ஒன்றின் உதவியாளர் உயிரிழந்தார்.

தொழில்நுட்பக் குறைபாட்டுக்குள்ளாகி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியொன்றின் பின்னால், மற்றொரு லொறியொன்று மோதி இந்த விபத்து நேர்ந்தது. பின்னால் மோதிய லொறியின் உதவியாளரே துரதிஷ்ட வசமாக உயிரிழந்துள்ளார்.

கடவத்தையிலிருந்து வெலிபன்ன நோக்கி ரப்பர் சீட் ஏற்றிச் சென்ற லொறி ஒன்றே தொழில்நுட்பக் கோளாறு காரணமாக வீதியின் ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. அதே திசையில் வெங்காயம் மற்றும் மரக்கறி ஏற்றி வந்த மற்றொரு லொறியே பின்னால் சென்று மோதியுள்ளது.

இந்த அனர்த்தத்தில் உயிரிழந்தவர் அளுத்கம தர்கா நகர் பகுதியைச் சேர்ந்த 48 வயதுடையவர் என்று தெரியவந்துள்ளது.



# இந்திய அரசாங்கமும் மக்களும் என்றுமே இலங்கை மக்களுக்குத் துணை நிற்பர்!

## மன்னாரில் துணைத் தூதுவர் சாய் முரளி தெரிவிப்பு

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர். லெம்பேட்)**

இந்திய அரசாங்கம் மற்றும் இந்திய மக்கள் இலங்கை மக்களுடன் என்றுமே துணை நிற்பார்கள் என இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் புயல் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு வழங்கும் வகையில் இந்திய அரசாங்கம் மற்றும் இந்திய மக்களால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்களைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை மதியம் மன்னார் மாவட்ட மீனவக் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட மீனவக் கூட்டுறவுச் சங்க சமாசச் செயலாளர் என்.எம்.ஆலம் தலைமையில் இடம்பெற்ற இந்த்ச் நிகழ்வில் கலந்து கொண்டு நிவாரணப் பொருள்களைக் கையளித்த பின் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் மன்னார் மாவட்டத்தில் புயல் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு முதல் கட்டமாக வழங்கும் வகையில் இந்த நிவாரணப் பொருள்களை கையளித்துள்ளோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட இந்த நிவாரணப் பொருள்கள் மன்னார் மாவட்டத்திற்கும் பங்கிடப்பட்டுள்ளது.

புயலால் .பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நவம்பர் 28 ஆம் திகதி முதல் இந்திய மக்களினதும் அரசாங்கத்தினதும் உதவி ஊடாக இது வரை சுமார் 1700 மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான உதவிப் பொருள்கள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு உள்ளது.

அந்த வரிசையிலே வடக்கு மாகாணத்திற்கும் குறிப்பாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு உதவிகளை வழங்கி வருகிறோம்.

இந்த நிவாரண உதவிகள் மாத்திரமின்றி மன்னார் மாவட்டத்தில் அடுத்த கட்டமாக பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள், படகுகள். வெளி இணைப்பு இயந்திரங்கள் போன்றவற்றை வெகு விரைவில் வழங்க உள்ளோம். அதனை வெகு விரைவில் எதிர்பார்க்கலாம்.

இந்திய அரசாங்கம்,இந்திய மக்கள்,இந்திய தூதரகமும் என்றும் உங்களுடன் துணை நிற்பார்கள். - என அவர் மேலும் தெரிவித்தார்.












# இந்தியப் பணத்தில் ரூ.12 கோடி மதிப்புடைய கஞ்சா எண்ணெய் பாம்பன் அருகே சிக்கியது

## இலங்கைக்குக் கடத்த நாட்டுப்படகில் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாம்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

பாம்பனை அடுத்த முந்தல் முனை கடற்கரை பகுதியில் இலங்கைக்குக் கடத்துவதற்காக படகில் பதுக்கி வைத்திருந்த 9.5 லீற்றர் கஞ்சா எண்ணெயைக் கைப்பற்றிய இந்தியக் கடலோர காவல் படையினர் கடத்தல்காரர்களைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

ராமநாதபுரம் மாவட்ட கடற்கரை பகுதி இலங்கைக்கு மிக அருகே இருப்பதால் பாம்பன் முந்தல் முனை குந்துகால், வேதாளை, மரைக்காயர்பட்டிணம், தனுஷ்கோடி உள்ளிட்ட கடற்கரைகளில் இருந்து இலங்கைக்கு சட்ட விரோதமான முறையில் படகுகளில் ஐஸ் போதைப் பொருள், கஞ்சா, கடல் குதிரை, கடல் அட்டை, மஞ்சள் உள்ளிட்ட பொருள்கள் கடத்தப்பட்டு வருகின்றன.

நேற்று அதிகாலை பாம்பன் அடுத்த முந்தல் முனை கடற்கரையில் இருந்து இலங்கைக்கு படகில் கஞ்சா எண்ணெய் கடத்த இருப்பதாக இந்தியக் கடலோரக் காவல் படையினருக்கு கிடைத்த தகவல் அடிப்படையில் இந்திய கடலோர காவல் படையினர் அப்பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் மறைந்திருந்தனர்.

அப்போது ஒரு படகில் மர்ம நபர்கள் நால்வர் கஞ்சா எண்ணெய்ப் பொட்டலங்களை ஏற்றிக் கொண்டிருந்தமையைக் கண்ட இந்தியக் கடலோர காவல் படையினர் அவர்களை மடக்கிப் பிடிக்க முயன்ற போது அவர்கள் நால்வரும் கடலில் குதித்து தப்பித்தனர்.

இதையடுத்து படகையும் அதிலிருந்து 9.5 லீற்றர் கஞ்சா எண்ணெய்யையும் கைப்பற்றிய இந்தியக் கடலோரக் காவல் படை வீரர்கள், அதனை இந்தியக் கடலோரக் காவல்படையின் மண்டபம் முகாமுக்கு எடுத்துச் சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

முதற்கட்ட விசாரணையில் கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகில் இருந்து கடலில் குதித்துத் தப்பித்தவர்கள் தங்கச்சி மடம் அந்தோனியார்புரம் பகுதியை சேர்ந்த நால்வர் எனத் தெரிய வந்துள்ளது.

தப்பியோடிய நால்வரையும் காவல் துறையினர் தீவிரமாக தேடி வருகின்றனர். கைப்பற்றப்பட்ட கஞ்சா எண்ணெயின் இந்திய மதிப்பு மதிப்பு 12 கோடி இருக்கும் என இந்தியக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

அது திருச்சி சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.











# புயலினால் வன்னியில் ஏற்பட்ட பாதிப்புக்களை நாடாளுமன்றில் பட்டியலிட்டார் ரவிகரன் எம்.பி.

***(பா.சதீசன்)***

டித்வா புயலினால் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் உள்ளிட்ட மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்பு விவரங்களை வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நாடாளுமன்றில் தரவுகளுடன் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் குளச்சேதங்களுக்கான நிரந்தரத்தீர்வு, பொருத்தமற்ற வாழ்விட மக்களுக்கான மாற்று வாழ்விட ஏற்பாடு, கைவிடப்பட்ட குளங்களை பராமரித்தல், ஆற்றுப்படுக்கைகளை எல்லைப்படுத்தல், குளங்களை உரிய திணைக்களங்களிடம் பாரப்படுத்தல், வெள்ளத்தால் தனிமைப்படுத்தபடும் கிராமங்கள் மற்றும் பிரதேசங்களுக்கான நிரந்தரத்தீர்வு, விவசாய வீதிகள் சீரமைப்பு, வெள்ளநீர்-உவர்நீர் கட்டுப்பாட்டு அணைகள் கட்டுமானம், நகர்ப் பகுதிகளுக்கான நிரந்தர வடிகாலமைப்பு நடைமுறைப்படுத்தல் உள்ளிட்டவற்றுக்கு அரசின் 2026 பாதீடு வாய்ப்பளிக்க வேண்டுமெனவும் அவரால் இதன்போது கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றில் 19.12.2025இன்ற இடம்பெற்ற

திடீர் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு ரூபா500 பில்லியனுக்கான குறைநிரப்பு மதிப்பீட்டு விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே ரவிகரன் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2004 சுனாமிக்குப் பின்னர் இலங்கையில் அதிகளவு பாதிப்பை டித்வா புயல் ஏற்படுத்தி உள்ளது.

இந்தப் புயலால் முல்லைத்தீவு மாவட்ட மக்களின் இயல்பு வாழ்வு முற்றாக நிலைகுலைந்தது. வீதிப்போக்குவரத்து முடக்கப்பட்டு மக்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். மின்சாரம், தொலைத் தொடர்பு சேவைகள் சிலநாள்கள் செயலிழந்தன. 45 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட வயல்நிலங்கள் 5 நாள்கள் அளவில் நீரில் மூழ்கின.

ஐந்து நாள்களுக்கு மேலாக மீன்பிடி முற்றாகத் தடைப்பட்டது. 22 ஆயிரத்து 918 குடும்பங்களைச் சேர்ந்த 67 ஆயிரத்து 340 பேர் முல்லைத்தீவில் பாதிக்கப்பட்டனர். 40 இடைத்தங்கல் முகாம்களில் 1,191 குடும்பங்களைச் சேர்ந்த 3,591 பேர் பாதுகாக்கப்பட்டனர். 32 வீடுகள் முற்றாகவும் 1379 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்தன. 250 இற்கும் மேற்பட்ட கிலோமீற்றர் நீளம் கொண்ட 193 சாலைகள் சேதப்பட்டன. 5 மதகுகள், 30 பாலங்களில் சேதநிலைகள் இதுவரை அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளன.

நாயாற்றுப்பாலம் ஊடான போக்குவரத்து இன்று வரை வழமைக்கு திரும்பவில்லை. 9 பாரிய, நடுத்தர அளவிலான குளங்களும் 32 சிறுகுளங்கள் சேதப்பட்டன. 30 படகுகள், 147 நன்னீர் சிறுபடகுகள் தொலைந்துள்ளன. 8,800 இற்கும் மேற்பட்ட கால்நடைகளை முல்லைத்தீவு இழந்துள்ளது. புயல் மற்றும் வெள்ள இடரால் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவரும் உயிரிழக்கவில்லை. ஒருவர் காயமுற்றார். இவற்றுக்கும் மேலாக அபாயநிலையில் தற்பொழுது 4,604 வீடுகள் உள்ளன.

13.12.2025 இன் படியாக 23,641 குடும்பங்களைச் சேர்ந்த 77,451 பேர் மன்னாரில் பாதிக்கப்பட்டனர். நால்வர் உயிரிழந்தனர். 88 பாதுகாப்பு நிலையங்களில் 5,580 குடும்பங்களைச் சேர்ந்த 18,088 பேர் பாதுகாக்கப்பட்டனர். 70 வீடுகள் முற்றாகவும் 1,517 வீடுகள் பகுதியளவிலும் சேதப்பட்டன. 22ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் வயல்நிலம் பாதிப்படைந்தது. 45ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகளை மன்னார் நிலம் இழந்தது. 151 படகுகள் சேதமடைந்தன.

09.12.2025 இன் படியாக 6,076 குடும்பங்களைச் சேர்ந்த 19,868 பேர் வவுனியாவில் பாதிக்கப்பட்டனர். 15 வீடுகள் முற்றாகவும் 864 வீடுகள் பகுதியளவிலும் சேதப்பட்டன. 58 பாதுகாப்பு நிலையங்களில் மக்கள் தங்கவைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டனர். 349 சாலைகள், 34 மதகுகள் மற்றும் பாலங்கள், 24 வடிகால்கள் 4 நீர் வழங்கல் அலகுகள் சேதப்பட்டன. 124 குளங்கள் பாதிப்படைந்தன. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகளை வவுனியா நிலம் இழந்தது.

கடந்த இருபதாண்டுகளில் இந்தத் தீவு சந்தித்த பெரும் இயற்கை அனர்த்தம் இது. தீவில் பெரும்பாலான மாவட்டங்கள் பாதித்தன. பெரும் எண்ணிக்கையிலான மலையக உறவுகளை இந்த இடரில் நாம் இழந்து தவிக்கிறோம்.

இப்பேரிடரில் உயிரை, உடமையை, வாழ்வாதார மூலங்களை இழந்துள்ள குடும்பங்களுடன் நின்று பாதிப்பில் இருந்து மெல்ல மீள வேண்டிய அதே நேரம் இத்தகைய இழப்புகள் மீண்டும் தொடரக்கூடாத

தொடர்ச்சி▼

# புயலினால் வன்னியில் ஏற்பட்ட பாதிப்புக்களை நாடாளுமன்றில் பட்டியலிட்டார் ரவிகரன் எம்.பி.

தொடர்ச்சி▲

வகையில் நிலைபேறான மீட்சியை இந்தத் தீவிலே ஏற்படுத்த நாம் அனைவருமே உறுதிகொள்ள வேண்டும்.

சாலைகள், பாலங்கள், மதகுகள், கால்வாய் மற்றும் வாய்க்கால்களின் கட்டுமானம் அடுத்த சில ஆண்டுகளில் நிலைகுலைந்து போகாத வகையில் முறையான திட்டமிடலுடன் மேற்கொள்ளப்படுவதை இந்த அரசு உறுதி செய்யவேண்டும்.

மாவட்டந்தோறும் தீர்க்கமான வடிகாலமைப்புக்குக்கான பெருந்திட்டம் தீட்டப்பட்டு அதற்கு அமைவான ஆண்டுத்திட்டமிடல்கள் முன்னெடுக்கப்படுவதை அரச நிறுவனங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

முல்லைத்தீவில் உடைப்பெடுத்த சில குளங்களுக்கு மழைக்காலத்திலான கட்டுமானங்களும் வலுச்சேர்த்துள்ளது. இது முறையற்ற திட்டமிடலையும் வெளிக்காட்டுகிறது.

பொருத்தமற்ற நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானங்களால் அரசு நிதி வீணாக்கப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளுக்கு மேலாகவும் ஒரு முப்பது அடிப் பாலம் கண்டாவளையில் கட்டி முடிக்கப்படாதிருப்பதும் ஊழலின் சாட்சியே! உட்கட்டமைப்பு விருத்திகளில் நடைபெறும் ஊழல்களையும் இந்தப்பேரிடர் வெளிக்கொண்டுவந்துள்ளது.

பேரிடரின் தாக்கத்தில் இருந்து அனைவருமாய் மீள எழத்தக்க வகையில் ஒருவருக்கு ஒருவர் உறுதுணையாக இருப்பது எவ்வளவு முக்கியமோ அது போல இனிவரும் காலத்தில் இத்தகைய இடர் வராதிருக்கும் வகையில் இடர்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் வினைத்திறனான நீர் மேலாண்மையை பேணத்தக்க வகையில் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதும் இன்றியமையாதது.

ஆழிப்பேரலையின் பின்னர் கடற்கரையோரங்களில் இருந்து மக்களின் வாழ்விடங்கள் உயரச்சென்றதைப் போல இப்பேரிடரின் பின்னர் மக்களை மண்சரிவு அபாயமுள்ள இடங்களில் இருந்தும் தாழ்நில பகுதிகளில் இருந்தும் வேற்றிடத்திற்கு குடியமரச்செய்து பாதுகாப்பான வாழ்வை உறுதிப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முல்லைத்தீவு ஆழிப்பேரலை பேரிடரை எதிர்கொண்ட மாவட்டம். கடந்த மாத பெரும் புயலின் பெரும்பாதிப்பையும் எதிர்கொண்ட மாவட்டம். அபிவிருத்தியின் அளவுகோலில் பலவற்றிலும் "இல்லை" என்ற வகுதிக்குள் உள்ளடக்கப்படும் முல்லைத்தீவு மாவட்டத்தின் நீர் மேலாண்மையும் இன்னும் மேம்படுத்தப்படவேண்டியுள்ளது.

இதைப்போல் இனியொரு பொழுது வேண்டாம் என்பதற்குரிய முல்லைத்தீவின் உடன் தேவைகளை இந்தப்பேரவையிலே முன்வைக்கிறேன்.

குளச்சேதங்களுக்கான நிரந்தரத்தீர்வு, பொருத்தமற்ற வாழ்விட மக்களுக்கான மாற்று வாழ்விட ஏற்பாடு, கைவிடப்பட்ட குளங்களை பராமரித்தல், ஆற்றுப்படுக்கைகளை எல்லைப்படுத்தல், குளங்களை உரிய திணைக்களங்களிடம் பாரப்படுத்தல், வெள்ளத்தால் தனிமைப்படுத்தபடும் கிராமங்கள் மற்றும் பிரதேசங்களுக்கான நிரந்தரத்தீர்வு, விவசாய வீதிகள் சீரமைப்பு, வெள்ளநீர்-உவர்நீர் கட்டுப்பாட்டு அணைகள் கட்டுமானம், நகர்ப்பகுதிகளுக்கான நிரந்தர வடிகாலமைப்பு நடைமுறைப்படுத்தல் உள்ளிட்டவற்றுக்கு தங்களின் 2026 பாதீடு வாய்ப்பளிக்க வேண்டும் என அரசிடம் இந்த பேரவை ஊடாக கேட்டுக்கொள்கிறேன்.

■ குளச்சேதங்களுக்கான நிரந்தரத் தீர்வு:-

முல்லைத்தீவில் 32 சிறு குளங்கள் சேதப்பட்டுள்ளன. முல்லைத்தீவின் பேரளவிலான குளமாக காணப்படும் முத்தையன்கட்டுக்குளம், தண்ணிமுறிப்புக்குளம் காலதாமதமின்றி மிகவிரைவாக சீர் செய்யவேண்டிய தேவை காணப்படுகிறது. வவுனிக்குளத்திலும் எதிர்காலத்தில் பாதிப்பு ஏற்படாதிருப்பதன் பொருட்டு வவுனிக்குள மேம்பாடு கருதிய அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் இந்த உயரிய சபையின் ஊடாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

■ பொருத்தமற்ற வாழ்விட மக்களுக்கான மாற்று வாழ்விட ஏற்பாடு:-

ஒவ்வோர் ஆண்டும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் கிராமங்களில் முதன்மையானவை, மன்னாகண்டலில் உள்ள வசந்தபுரம் கிராமம், பண்டாரவன்னி கிராமம் மற்றும் சிராட்டி குளம் கிராமம்.

ஓராண்டு வரையான சொத்துகளில் பெரும்பாலானவற்றை ஒவ்வோர் ஆண்டும் மார்கழி மாத வெள்ளத்தில் அம்மக்கள் பறிகொடுக்கின்றனர். இம் மூன்று இடங்களிலும் உள்ள மக்களுக்கு பாதுகாப்பான வாழ்விடத்தையும் வீட்டையும் இந்த அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

■ கைவிடப்பட்ட குளங்களைப் பராமரித்தல், ஆற்றுப்படுக்கைகளை எல்லைப்படுத்தல், குளங்களை உரிய திணைக்களங்களிடம் பாரப்படுத்தல்:-

20 நடுத்தர, பெரிய குளங்களையும் நூற்றுக் கணக்கான சிறுகுளங்களையும் 19 ஆற்றுப்படுக்கைகளையும் முல்லைத்தீவு கொண்டுள்ளது. குளம் நிரம்பி வான் பாயும் போதும் நிரம்பி நீர் வழியும் போதும் உடைப்பெடுத்து பாயும் போதும் பாரிய பாதிப்புகள் ஏற்படுகின்றன.

முல்லைத்தீவில்ஏற்படும்வெள்ளப்பெருக்குகளுக்கு பராமரிக்கப்படாது உள்ள கழிவாறுகளும் காரணமாகின்றன. இவற்றில் பெரும்பாலானவை வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. கழிவாறுகளை உடனடியாக துப்புரவுசெய்து அவற்றை எல்லைப்படுத்தி, கழிவாறுகளில் உள்ள தடைகளை அப்புறப்படுத்தி அவற்றை அகலப்படுத்தும் போது குளத்தின் கீழ்ப்பகுதிகளில் இருந்து வருகின்ற நீர் விரைவாகத் தடையின்றிச் செல்லும். இதன் மூலம் ஆற்றங்கரைகளில் வெள்ளப்பெருக்கை தடுக்க முடிவதோடு குளங்களுக்கு கீழ் உள்ள பிரதேசங்களில் ஏற்படும் வெள்ளப்பெருக்கையும் கட்டுப்படுத்த இயலும்.

பதிவுகளின் அடிப்படையில் முல்லைத்தீவில் 483 சிறுகுளங்கள் உள்ளன. இவற்றுள் 181 குளங்கள் கைவிடப்பட்டு உள்ளன. சிறுகுளங்கள் உடைப்பெடுத்து பாயும் வெள்ள நீர் நடுத்தர மற்றும் பெரிய குளங்களுக்கு மேலும் பாதிப்பைக் கொண்டுவருகின்றன. சிறுகுளங்களைப் பராமரிக்கும் வகையில் உரிய திணைக்களங்களிடம் பாரப்படுத்தும் போது மாவட்டத்தின் வரட்சியை போக்கமுடியும். எதிர்கால வெள்ளப்பாதிப்பையும் குறைக்கமுடியும்.

வனவளத்திணைக்களத்திற்கும் படையினருக்கும் குளங்களும் ஆற்றுப்படுக்கைகளும் ஏன்?

முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 21 குளங்கள் வனவளத்திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. அக்குளங்களை எல்லைப்படுத்தி அவற்றை உரிய திணைக்களங்களிடம் கையளித்து அவற்றை உரிய திணைக்களங்களே பராமரிப்பதற்கு இந்த அரசு வழி காட்ட வேண்டும். 438 பயனாளிகளுக்கான 1,483 ஏக்கர் வாழ்வாதார நிலம் வனவளத்திணைக்களத்தின் கையகப்படுத்தலால் பயன்பாடற்று உள்ளது. கைவிடப்பட்ட குளங்களை உரியவாறு பராமரித்தால் கட்டற்ற வெள்ள நீர் பாரிய நடுத்தர குளங்களை ஆக்கிரமிப்பதையும் கட்டுப்படுத்த முடியும்.

பொருத்தமற்ற திணைக்களங்களின் கட்டுப்பாட்டில் உள்ள குளங்களையும் ஆற்றுப்படுக்கைகளையும் உரிய திணைக்களங்களுக்கு எல்லைப்படுத்தி அவற்றின் தொடர் பராமரிப்பை உறுதி செய்யுமாறு இந்த பேரவையின் கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்ச்சி▼

# புயலினால் வன்னியில் ஏற்பட்ட பாதிப்புக்களை நாடாளுமன்றில் பட்டியலிட்டார் ரவிகரன் எம்.பி.

தொடர்ச்சி▲

■ வெள்ளத்தால் தனிமைப்படுத்தபடும் கிராமங்கள் மற்றும் பிரதேசங்களுக்கான நிரந்தரத்தீர்வு:-

ஒவ்வோர் ஆண்டும் மார்கழி மழை வெள்ளத்தில் மாந்தை கிழக்கு பிரதேசம் தனிமைப்படுத்தப்படுகிறது. மாந்தை கிழக்கு குத்துப்பாலத்தின் ஊடான அதிக நீர் வரத்து மாந்தை கிழக்கைத் தனிமைப்படுத்துகிறது. பாலத்துக்கான மாற்றுப் பாலம் உயரமாகவும், பலமாகவும் கட்டமைக்கப்படல் வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மேழிவனம் கிராமமும் ஒவ்வோர் ஆண்டும் வெள்ளத்தால் தனிமைப்படுத்தப்படுகிறது. அதே போல் புதுக்குடியிருப்பு பிரதேசமும் கேப்பாபுலவு வழி ஊடாகவும் ஒட்டுசுட்டான் வழி ஊடாகவும் அதிக வெள்ளநீர் ஊடறுத்துப் பாயும் போது குறிப்பிட்ட சில நாள்கள் முற்றாக துண்டிக்கப்படும் நிலையை எதிர்கொள்கிறது.

மேழிவனம் கிராமத்துக்குச் செல்லும் வழியில் உள்ள ஓர் ஆற்றுச்சருக்கையையும் (கோஸ்வே) கேப்பாப்புலவு வழி ஊடான புதுக்குடியிருப்பு பாதையில் உள்ள இரண்டு ஆற்றுச்சருக்கைகள், ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு வழியில் உள்ள ஓர் ஆற்றுச்சருக்கை என்பவற்றில் உயரமான பெட்டிப் பாலங்களை நிருமாணிக்கும் போது வெள்ள அனர்த்தத்தின் போது மேற்படி பிரதேசம் மற்றும் கிராமங்கள் போக்குவரத்தில் முற்றாக துண்டிக்கப்படும் நிலையை தவிர்த்துக் கொள்ள முடியும்.

■ விவசாய வீதிகள் சீரமைப்பு:-

நித்தகைக்குள வீதி, அக்கரைவெளி வீதி, புளியமுனை வீதி, கொண்டைமடு கேப்பாப்புலவு வீதி உள்ளிட்ட விவசாய வீதிகளின் சீராக்கமும் இன்றியமையாதது. இவற்றை சீரமைக்கும் போது ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல்நிலங்களின் விளைச்சல் உறுதிப்படுத்தப்படுத்தப்படுவதோடு விவசாயிகளின் வாழ்வாதாரத்திலும் பாரியளவான நேரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

■ வெள்ளநீர்-உவர்நீர் கட்டுப்பாட்டு அணைகள் கட்டுமானம்:-

முல்லைத்தீவின் வெள்ளநீர் கடலுக்கு சாலை, நந்திக்கடல், நாயாறு, கொக்கிளாய் ஆகிய பகுதிகளால் கடலுடன் சேர்கிறது.

நந்திக்கடல், வெட்டுவாய்க்கால் முகத்துவாரம் ஊடாக கடக்கும் வழியில் முன்னைய காலத்தில் முல்லைத்தீவில் காணப்பட்ட வண்டில் பாதை ஒரு குறுக்கணையாக அமைந்து மேலதிக நீரை வெளியேற்றும் வகையிலும் உவர் நீர் வயல்நிலங்களில் கலக்காதிருப்பதையும் உறுதிப்படுத்தியது. அந்த வண்டில் பாதை மீளவும் குறுக்கணையோடு அமைக்கப்படுவது பெருமளவு நீர் கடலோடு சேர்வதை தடுக்கும்.

தண்ணிமுறிப்புக் குளத்தில் இருந்து அதிக நீர் வெளியேற்றப்படும் போது செம்மலை, குமுழமுனை கிராமங்கள் பாதிக்கப்படுகின்றன. கடந்த வெள்ளப்பெருக்கில் மேற்படி சூழலில் செம்மலையின் உவர் நீர் தடுப்பணை உடைந்துள்ளது. இப்பகுதியிலும் குறுக்கணை ஒன்றுக்கான தேவை உள்ளது.

■ நகர்ப்பகுதிகளுக்கான நிரந்தர வடிகாலமைப்பு நடைமுறைப்படுத்தல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் வினைத்திறனற்ற வடிகாலமைப்பு சீரின்மையால் புதுக்குடியிருப்பு மற்றும் மாங்குளம் நகர்ப்பகுதிகள் ஒவ்வோராண்டும் பாதிக்கப்படுகின்றன.

புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் ஏற்கனவே கொங்கிறீட் வடிகால் அமைக்கப்பட்டபோதும் அதன் தொடர்ச்சி புதுக்குடியிருப்பு சந்தியில் இருந்து இரணைப்பாலை சாலை வரை நீட்டப்படவேண்டும்.

வடமாகாணத்தின் மையமாக உள்ள மாங்குளம் நகர்ப்பகுதியும் ஒவ்வோர் ஆண்டும் வெள்ளப்பாதிப்பை எதிர்கொள்கிறது. நகரை அண்டிய நிரந்தர வடிகாலமைப்பு மாங்குளத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சுனாமி, ட்ஜத்வா என்று தொடரும் பேரனர்த்தங்களுக்கும் மேலாக ஒவ்வோராண்டும் ஏற்படும் வெள்ள அனர்த்தத்தால் மக்களின் இயல்பு வாழ்வு பாதிப்படல், சொத்தழிவு ஏற்படல் உள்ளிட்டவற்றுக்கு நிரந்தரத் தீர்வு வேண்டும். முல்லைத்தீவு மக்களின் நிலைபேறான வாழ்வு கருதி நிரந்தர நீர் மேலாண்மைக்கான மேற்படி அபிவிருத்திப் பணிகளுக்கு 2026 இல் முன்னுரிமை அளியுங்கள் எனக்கேட்டுக் கொள்கிறேன் - என்றார்.

# நடைபாதை வியாபாரத்தை தடை செய்ய பருத்தித்துறை வர்த்தக சங்கம் நடவடிக்கை

வடமராட்சி முழுவதுமாக நடைபாதை வியாபார நடவடிக்கையினை தடை செய்யப்பட்ட பிரதேசமாக மாற்றுவதற்கு பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வெளிமாவட்டங்களில் இருந்து பருவகால வியாபார நடவடிக்கைக்காக பலர் வடமராட்சி பிரதேசத்திற்கு வருகின்றனர். இவ்வாறு நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டு வருபவர்களினால் பல்வேறு அசௌகரியங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் வர்த்தக சமூகம் உள்ளிட்ட பொது மக்கள் முகம்கொடுத்து வருகின்றனர்.

வீதி போக்குவரத்தில் ஈடுபட்டு வரும் வாகன சாரதிகள் உள்ளிட்ட பொது மக்களுக்கு இடையூறு, பாதசாரிகளுக்கு அசௌகரியம், விபத்து ஏற்படும் சூழல் போன்ற பொதுவான பிரச்சினைகள் நடைபாதை வியாபாரத்தின் மூலம் ஏற்பட்டு வருகிறது. அதுமாத்திரமல்லாது, நிலையான கட்டட அமைப்புகளில் வாடகை, வரி என்பவற்றை செலுத்தி பெரும் முதலீட்டில் தொழிலில் ஈடுபட்டு வரும் வர்த்தகர்கள் பெரும் பாதிப்புகளை இதனால் சந்தித்து வருகின்றனர்.

இவ்வாறான விடயங்களை கருத்தில் கொண்டு பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரசபை மற்றும் கரவெட்டி பிரதேச சபை என்பன தத்தமது எல்லைக்குள் நடைபாதை வியாபாரத்தினை முற்றாக தடைசெய்துள்ளன. பருத்தித்துறை வர்த்தகர் சங்கமும் நடைபாதை வியாபாரத்திற்கு அனுமதி மறுத்துள்ளதுடன், அதனை மீறி செயற்படுபவர்களை பருத்தித்துறை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் ஊடாக அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இருப்பினும் பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் நடைபாதை வியாபாரம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறான நிலையில், நத்தார், புதுவருடம், தைப் பொங்கல் என சுமார் ஒரு மாதகாலம் தொடர் பண்டிகைகள் வர உள்ள நிலையில், வடமராட்சி பிரதேசத்திற்கு வரும் நடைபாதை வியாபாரிகள் இந்த பிரதேசத்தில் வியாபார நடவடிக்கையினை மேற்கொள்ளும் நிலை உருவாகியுள்ளது.

இதனை தடுக்கும் வகையில், பருத்தித்துறை பிரதோச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலும் நடைபாதை வியாபார நடவடிக்கையினை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச சபை தவிசாளர் உ.யுகதீஸ், உப தவிசாளர் காந்தரூபன் மற்றும் செயலாளர் ஆகியோரை நேரில் சந்தித்து பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தினர் கோரியுள்ளனர்.

எதிர்வரும் சபை அமர்வில் அது தொடர்பில் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக பிரதேச சபை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடும் காற்றுடன் பலத்த மழை; மின்னல் குறித்து எச்சரிக்கை



மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் கடும் காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் பொலன்னறுவை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மழை பெய்யக் கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் இரவு வேளைகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் நிலவுவதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் தற்காலிகமாக வீசும் பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை தவிர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மக்களை அறிவுறுத்தியுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் ஊடாக அம்பாந்தோட்டை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

கொழும்பிலிருந்து காலி ஊடாக மாத்தறை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் நிலவுவதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக் கூடும் என்பதுடன் காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 30 முதல் 40 கிலோ மீற்றர் வரை இருக்கும் என திணைக்களம் கூறியுள்ளது.

கொழும்பிலிருந்து புத்தளம் ஊடாக மன்னார் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகம் இடைக்கிடையே மணித்தியாலத்துக்கு 45 முதல் 50 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நேற்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் உடுதும்பர பகுதியில் 201 மில்லி மீற்றர் வரை மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

போபிட்டியவில் 155 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் நுகதென்ன பகுதியில் 137 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் இரத்தோட்டை ஹுனுகல்வத்த பகுதியில் 129 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் உடுதும்பர பல்லேவல பகுதியில் 127 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

இதேவேளை, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் பொலன்னறுவை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிக பலத்த மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு, வடமேல் மாகாணங்களிலும் அனுராதபுரம் மாவட்டத்திலும் இடைக்கிடையே மழைபெய்யக்கூடும்.

மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் பிற்பகல் ஒரு மணிக்கு பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

கண்டி மாவட்டத்தின் 4 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் நுவரெலியா மாவட்டத்தின் 4 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் மண்சரிவு சிவப்பு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உடுதும்பர மற்றும் வலப்பனை ஆகிய பகுதிகளில் 2 மண்சரிவு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட பூகோளவியலாளர் கலாநிதி வசந்த சேனாதீர தெரிவித்தார்.

சமூக ஊடகங்களில் பரவும் உண்மைக்கு புறம்பான தகவல்கள் தொடர்பில் குழப்பமடைய வேண்டாம் எனவும் உத்தியோகபூர்வ மற்றும் அரச நிறுவனங்கள் ஊடாக வெளியிடப்படும் தகவல்களுக்கு அமைவாக தீர்மானங்களை எடுக்குமாறும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பூகோளவியலாளர் பொது மக்களுக்கு அறிவுத்தல் விடுத்துள்ளார்.

# REBUILDING SRI LANKA நிதியத்திற்கு 4,263 மில்லியன் ரூபா நிதி கிடைத்தது




REBUILDING SRI LANKA நிதியத்திற்கு இதுவரை 4263 மில்லியன் ரூபா நிதி கிடைத்துள்ளது.

ஊடகங்களுக்கு அறிக்கையொன்றை வெளியிட்டு நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும இதனை தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு நாணயங்களில் மாத்திரம் 6 மில்லியன் டொலருக்கும் அதிகமான நிதி இந்த நிதியத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டிலுள்ள இலங்கையர்கள், வர்த்தகர்கள், வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்கள், வர்த்தகர்கள், இராஜதந்திரிகள் ஆகிய தரப்பினரிடம் இருந்து REBUILDING SRI LANKA வேலைத்திட்டத்திற்கு சிறப்பாக ஒத்துழைப்புகிடைப்பதை இது வெளிப் படுத்துவதாக நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்துள்ளார்.



# ரயில் சேவைகள் மீண்டும் ஆரம்பம்

அம்பேவெல – பதுளை மற்றும் கொழும்பு கோட்டை – திருகோணமலை ரயில் சேவைகளை இன்று முதல் மீள ஆரம்பிப்பதற்கு ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அம்பேவெல – பதுளை இடையே 2 ரயில்களை சேவையில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் அசங்க சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பு கோட்டையில் இருந்து திருகோணமலைக்கும் திருகோணமலையிலிருந்து கொழும்பு கோட்டைக்கும் காலை 7 மணிக்கு இன்று முதல் ரயில்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பதாக அவர் கூறினார்.

வடக்கு மார்க்கத்தில் ரயில் போக்குவரத்து மாஹோ வரை மாத்திரமே முன்னெடுக்கப்படுகிறது.

கலாஓயா பாலத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளின் பின்னர் காங்கேசன்துறை வரையான ரயில் போக்குவரத்தில் காணப்படும் தடைகள் நீக்கப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

# தமிழக முதல்வர் ஸ்டாலினுடன் பிரதி அமைச்சர் பிரதீப் சந்திப்பு

இலங்கை மற்றும் தமிழ்நாடு அரசுகளின் உறவுகளை வலுப்படுத்தும் முகமாக தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் நேற்று சென்னையில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது பேரிடர் காலத்தில் இலங்கைக்குத் துரிதமாக உதவிய இந்திய அரசுக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்குமான அத்தியாவசிய பொருட்களை அனுப்பி வைத்த தமிழக அரசுக்கும் இந்திய வம்சாவளி மலையக மக்கள் சார்பில் பிரதி அமைச்சர் பிரதீப் தனது நன்றியை தமிழக முதலமைச்சரிடம் தெரிவித்துக் கொண்டார்.

இதன்போது மலையக மாணவர்களுக்கான தமிழகத்தில் உயர் கல்வி வாய்ப்புகள் தொடர்பில் பிரதானமாகக் கலந்துரையாடப்பட்டது.

சபரிமலை ஐயப்ப யாத்திரையைப் புனித யாத்திரையாக இலங்கை அரசு பிரகடனப்படுத்தியமை தொடர்பில் தமிழக முதலமைச்சர் இலங்கை அரசுக்குப் பாராட்டுகளை தெரிவித்தார்.

பேரிடரால் பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு உதவிகளை வழங்கவும் கலை, கலாசார கல்வி அபிவிருத்திக்குத் தொடர்ந்து தமிழக அரசு உதவி மற்றும் ஒத்துழைப்புகளை நல்குவதாகவும் இதன்போது தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் உறுதியளித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சென்னையில் ள்ள இலங்கைக்கான உதவி உயர்ஸ்தானிகர் கலாநிதி கணேசன் கேதீஸ்வரனும் கலந்துகொண்டார்.

இலங்கையில் கடந்த 27ஆம் திகதி முதல் இரு நாட்கள் வீசிய டித்வா புயல் காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் மலையகம் உட்பட 17 மாவட்டங்கள் பாதிப்புக்குள்ளாகிய நிலையில் குறிப்பாக இந்திய வம்சாவளி



மலையக மக்கள் வாழும் பகுதிகளில் பாரிய அளவில் மண்சரிவினால் பாதிக்கப்பட்டன.

“பேரிடரில் இருந்து இலங்கையை மீட்க இந்திய மத்திய அரசும் தமிழக அரசும் எமக்கு உதவிக்கரம் நீட்டின.

காலம் உணர்ந்து செயற்பட்ட இந்திய அரசுக்கும் தமிழ்நாட்டு அரசுக்கும் நன்றி தெரிவிக்கும் முகமாகவும், மலையக மக்களுக்கு இலங்கை அரசு முன்னெடுத்துள்ள அபிவிருத்தி மற்றும் பொருளாதாரசெயற்பாடுகள்சம்பந்தமானவிளக்கத்தை வழங்கவும், பேரிடர் பாதிக்கப்பட்டுள்ள மலையக மக்களின் அடுத்த கட்ட நகர்வுக்காக இலங்கை அரசு முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள் பற்றி தெளிவுபடுத்தவும், அதேநேரம் தமிழக அரசின் குறுகிய கால நீண்ட கால ஒத்துழைப்பு சம்பந்தமாக கலந்துரையாடவும், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் நேற்று சென்னையில் தமிழக முதலமைச்சர் ஸ்டாலினை உத்தியோகபூர்வமாகச் சந்தித்தார்.” – என்று பிரதி அமைச்சரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நீண்ட நேர கலந்துரையாடலின் போது இலங்கையில் ஏற்பட்ட பேரிடர் மலையக மக்களின் வாழ்வு, அவர்களின் எதிர்காலம், அதற்காக இலங்கை அரசு எடுக்கும்திட்டங்கள், இந்தியமற்றும்தமிழ்நாட்டு அரசுகளால் செயற்படுத்தக்கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டன என்றும் பிரதி அமைச்சரின் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.







# மாவிலாறு உடைப்பெடுத்து பாதிக்கப்பட்ட பகுதிகளை விவசாய திணைக்கள பணிப்பாளர் குழு ஆய்வு செய்தது

மாவிலாறு அணைக்கட்டு உடைப்பெடுத்து வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மூதூர் –கங்குவேலி பகுதியிலுள்ள வயல் நிலங்களை இலங்கை விவசாய திணைக்கள பணிப்பாளர் நாயகம் விக்கிரம ஆராய்ச்சி தலைமையிலான குழுவினர் நேரில் சென்று கள ஆய்வு செய்தனர்.

அத்தோடு மூதூர் – கங்குவேலி விவசாயிகள் விவசாய பணிப்பாளர் நாயகத்திடம் தமது பிரச்சினைகள் சார்ந்தும் கருத்துக்களை முன்வைத்தனர்.

இதன்போது அழிவடைந்த வேளாண்மைகள் பார்வையிடப்பட்டதோடு, அழிவடைந்த வேளாண்மைகளின் மீள் விதைப்பும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், இலங்கை விவசாயத் திணைக்கள விரிவாக்கல் மற்றும் பயிற்சி பணிப்பாளர் பி.சசிரகுமார, கிழக்கு மாகாண விவசாய பணிப்பாளர் எம்.எஸ். றினோஸ், திருகோணமலை மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர், ஐ.எல். பௌசுல் அமீன் மற்றும் பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.









# சுகாதார குறைபாடுகளுடன் இயங்கிய உணவகங்களுக்கு எதிராக தண்டம்

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பருத்தித் துறை நகர்ப்புறத்தில் உள்ள வியாபார நிலையங்கள் மற்றும் உணவு கையா ளும் நிலையங்களில் பருத்தித்துறை மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர் இணைந்து பரிசோதனை மேற்கொண் டனர்.

இதன்போது சுகாதார குறைபாடு களுடன் இயங்கிய 06 உணவு கையா ளும் நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் உணவு கையாளுபவர்களிற்கு எதிராக பருத்தித்துறை நகரசபையின் பொதுச்சுகாதாரபரிசோதகர்ப.தினேஷால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசா ரணையிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் தம்மீதான குற் றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில், 150,000 தண்டப்ப ணம் நீதிமன்றத்தால் அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






# விக்டோரியா நீர்த்தேக்கத்தின் 6 வான் கதவுகள் திறப்பு




தொடர்ந்து பெய்துவரும் கனமழை காரணமாக விக்டோரியா நீர்த்தேக்கத் தின் 6 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் வினாடிக்கு 17,500 கன அடி நீர் ரந்தெனிகல நீர்த்தேக்கத் திற்கு வெளியேற்றப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மணித்தியாலங் களாக இவ்வாறு திறக்கப்பட்டுள்ள வான் கதவுகள், எதிர்வரும் சில மணித்தியாலங் களுக்கும் இதே நிலையில் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை இராஜாங்கனை நீர்த் தேக்கத்தின் 6 வான் கதவுகள் திறக்கப் பட்டுள்ளன.



# மொட்டுவின் ஜனாதிபதி வேட்பாளராக நாமலே மீண்டும் களமிறங்கக்கூடும்!

## இப்படிக் கூறுகின்றார் சாகர

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ஷவே தமது கட்சி வேட்பாளராகக் களமிறங்கக்கூடும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்களின் நிலைப்பாடு இதுவாகவே இருக்கின்றது எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஷவே தற்போது கட்சிக்குள் அடையாளம் காணப்பட்டுள்ளார். எனினும், ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை. கட்சியின் அரசியல் குழு கூடியே இறுதியான – உறுதியான முடிவை எடுக்கும்.” – என்றார்.

2024 ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சார்பில் நாமல் ராஜபக்ஷ களமிறங்கி படுதோல்வியடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஷவே மீண்டும் போட்டியிடுவார் என்று அக்கட்சி உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ரணில் ஒருபோதும் பதவி விலகக்கூடாது!

## அவருடன் இணைந்து பயணிக்கவே தமக்கு விருப்பம் என்கிறது சஜித் அணி



“முன்னாள் ஜனாதிபதியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அனுபவம்மிக்க தலைவர். அவர் தலைமைப் பதவியில் இருந்து விலக வேண்டியதில்லை. அவருடன் இணைந்து பயணிக்கவே நாம் விரும்புகின்றோம்.” – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்ஜய பெரேரா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“ரணில்விக்கிரமசிங்கஅனுபவம்மிக்க தலைவர். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டவர். அவர் பதவி விலகுவதை நாம் விரும்பவில்லை.

ரணில், சஜித் என இரு தரப்பு உறுப்பினர்களும் இணைந்து செல்ல வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

எதிர்காலத்தில் அமையவுள்ள எமது நாட்டை வழிநடத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்கவின் அனுபவம் அவசியம். அவர் ஆலோசகராகவேனும் பதவிவகிக்கலாம்.” – என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து விலகுவதற்குத் தான் தயார் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன ஒன்றிணைவதற்குத் தான் தடை எனக் கருதப்படுமானால் இந்த முடிவை எடுக்கத் தயார் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டத்தின்போதே ரணில் இவ்வாறு தெரிவித்தார் என்று செய்திகள் வெளியாகி இருந்தன.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஐக்கிய மக்கள் சக்தி தரப்பில் இருந்து மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பதவி துறக்கவே மாட்டேன்! கட்சி மறுசீரமைக்கப்படும்!!



## இ.தொ.கா. பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் அறிவிப்பு

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து விலகும் நோக்கம் தனக்கு இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் அறிவித்துள்ளார்.

அவரால் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இ.தொ.காவின் பொதுச்செயலாளர் பதவியை ஜீவன் தொண்டமான் விரைவில் இராஜினாமா செய்யவுள்ளார் எனச் செய்திகள் வெளியாகி இருந்தன.

இலங்கைத்தொழிலாளர்காங்கிரஸ்'க்குள் ஏற்பட்டுள்ள மோதல் காரணமாகவே அவர் இந்த முடிவை எடுத்துள்ளார் எனவும் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே இது தொடர்பான சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் இ.தொ.காவின் பொதுச் செயலாளர் என்ற அடிப்படையில் ஜீவன் தொண்டமானால் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:–

"இ.தொ.கா. என்பது இந்திய வம்சாவளி மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்காக எமது முன்னோர்களின் தியாகங்களினால் கட்டமைக்கப்பட்ட ஸ்தாபனமாகும்.

இதன் பொதுச்செயலாளர் என்ற வகையில் என்னுடைய பொறுப்புகளில் இருந்து விலகுவது என்னுடைய நோக்கமல்ல.

காலத்தின் தேவைக்கேற்ப ஸ்தாபன கட்டமைப்பில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

இதைத் தவறான புரிதலுடன் சமூக டகங்களில் பரப்பப்படும் தகவல்களைக் கவனத்தில்கொள்ள வேண்டியதில்லை. ஸ்தாபனத்தை ஜனநாயக முறையில் மேலும் வலுப்படுத்துவதே எமது நோக்கம்.

இதற்கமைய அடுத்த மூன்று மாதங்களுக்குள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை கூட்டப்பட்டு தேவையான மாற்றங்கள் குறித்து தீர்மானிக்கப்படும்.

சமூகத்துக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்படும்போது, ஸ்தாபனம் உறுதியுடன் முன்னேற்றப் பாதையில் பயணிக்கும்." – என்றுள்ளது.

# வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டமை அநீதி!

## சபையில் கொந்தளித்த எதிர்க்கட்சித் தலைவர்




கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷன் பெல்லன பணி இடைநீக்கம் செய்யப்பட்டமை அநீதியான நடவடிக்கை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் மேலும் தெரிவித்ததாவது:–

"புதிய அரசமைப்பு இயற்றப்படும் போது கருத்துச் சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகள் அவசியம்.

ஏனெனில் மருந்து மாபியா உட்பட சுகாதார சேவையில் நிலவும் ஊழல், மோசடிகளை அம்பலப்படுத்தும் வைத்தியர் ருக்ஷன் பெல்லன பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ஊடகங்களுக்குத் தகவல்களை வழங்கினார் என்பதற்காகவே அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனை ஏற்க முடியாது. அநீதியான நடவடிக்கையாகும்.

தரம் குறைவான மருந்து மற்றும் சுகாதாரத்துறையில் நடக்கும் ஊழல், மோசடிகள் தொடர்பில் கருத்து வெளியிடும் சுதந்திரம் அவருக்கு இல்லையா?

தரம் குறைவான ஊசி பயன்பாட்டால் இருவர் உயிரிழந்துள்ளனர். அவர்களின் வாழும் உரிமை பறிபோய் உள்ளது. இது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?" – என்றார் எதிர்க்கட்சித் தலைவர்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய,

"இரு மரணங்கள் தொடர்பில் கவலை அடைகின்றோம். அது தொடர்பில் விசாரணை நடக்கின்றது. விசாரணை அறிக்கை வெளிவந்த பின்னரே மேலதிக தகவல்கள் தெரியவரும்." – என்றார்.

# வாக்காளர்கள் பட்டியல் வெளியீடு; தமிழகத்தில் 97 லட்சம் பேர் நீக்கம்



தமிழகத்தில் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை தொடர்ந்து வெளியிடப் பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் 97.37 லட்சம் பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

கடந்த ஒக்டோபர் 27ஆம் திகதி நிலவரப்படி, 6.41 கோடி வாக்காளர்கள் இருந்த நிலையில், தற்போது 5.44 கோடி வாக்காளர்கள் இருப்பதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்.ஐ.ஆர்) பணிகள் கடந்த ஒக்டோபர் 27ஆம் திகதி இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டது. நவம்பர் 4ஆம் திகதி எஸ்.ஐ.ஆர். பணிகள் தொடங்கின. இப்பணியில் 68 ஆயிரம் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (பி.எல்.ஓ) ஈடுபடுத்தப்பட்டனர். அவர்கள் வீடு வீடாக சென்று, எஸ்.ஐ.ஆர். படிவங்களைவழங்கி, ஆய்வு செய்து, பூர்த்தி செய்த படிவங்களை கணினியில் பதிவேற்றினர். இப்பணிகள் கடந்த டிசம்பர் 14ஆம் திகதி நிறைவடைந்தன.

ஏற்கெனவே அறிவித்தபடி, தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியல்களை, சம்பந்தப்பட்ட தொகுதிகள் இடம்பெற்றுள்ள மாவட்டங்களின் ஆட்சியர்கள், அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் நேற்று வெளியிட்டனர்.

இதுதொடர்பாக சென்னையில் செய்தியாளர்களிடம் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் நேற்று கருத்து தெரிவிக்கையில்,

"வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியில், கணக்கெடுப்பு பணி நிறைவுற்று வரைவு வாக்காளர் பட்டியல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அனைத்து வாக்குச்சாவடி மையங்கள், சிறப்பு முகாம்களிலும் மக்கள் பார்வைக்காக இந்த பட்டியல் வைக்கப்படும். www.elections.tn.gov.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்படும். இதில் மக்கள் தங்களது பெயர் மற்றும் குடும்பத்தில் உள்ள வாக்காளர்களின் பெயர் விவரங்களை சரிபார்த்துக் கொள்ளலாம்.

இந்த பட்டியலின் அடிப்படையில், தகுதியுள்ள வாக்காளர்களை புதிதாக சேர்க்க அல்லது தகுதியற்ற வாக்காளர்களை நீக்க எந்த ஒரு வாக்காளரும், அரசியல் கட்சியும் தங்கள் ஆட்சேபனைகளை நேற்று முதல் ஜனவரி 18 ஆம் திகதி வரை தாக்கல் செய்யலாம். இதை ஆய்வு செய்ய 234 வாக்காளர் பதிவு அலுவலர்கள், 1,776 உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் பணியில் உள்ளனர்.

இந்த காலகட்டத்தில், வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெறாதவர்கள், வரும் ஜனவரி 1 ஆம் திகதி 18 வயது பூர்த்தி அடைந்த இளம் வாக்காளர்கள் படிவம் 6-ஐ பூர்த்தி செய்து வழங்கலாம். வாக்காளர் பட்டியலில் நிரந்தர இடமாற்ற பதிவுகள், உயிரிழந்தோர் உள்ளிட்ட ஆட்சேபனை தொடர்பாக படிவம் 7-ஐ பூர்த்தி செய்தும், தொகுதிகளிலேயே ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு குடிபெயர்ந்து புதிய வசிப்பிடத்தில் உள்ளவர்களும், வேறு தொகுதிக்கு குடிபெயர்ந்தவர்களும் படிவம் 8-ஐ பூர்த்தி செய்தும், அதற்கான ஆவண ஆதார நகல்களை இணைத்து சம்பந்தப்பட்ட சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட, தொடர்புடைய பகுதிக்கான வாக்காளர் பதிவு அலுவலரிடம் சமர்ப்பிக்கலாம்.

அனைத்து வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம் நடைபெறும்போது உரிய படிவங்களை பி.எல்.ஒக்களிடமும் சமர்ப்பிக்கலாம். www.elections.tn.gov.in என்ற இணையதளம் மூலமாகவும், பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தங்கள் மேற்கொள்ளலாம். தமிழகத்தில் 68,467 வாக்குச்சாவடிகள் இருந்த நிலையில், தற்போது புதிதாக 6,568 வாக்குச் சாவடிகள் உருவாக்கப்பட்டு, மொத்தம் 75,035 சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் கடந்த அக்.27 நிலவரப்படி, 6 கோடியே 41 லட்சத்து 14 ஆயிரத்து 584 வாக்காளர்களின் பெயர்கள் இடம்பெற்றிருந்தன. நடந்து முடிந்த எஸ்.ஐ.ஆர். திருத்தத்தின்படி, தமிழகத்தில் 2,66,63,233 ஆண் வாக்காளர்கள், 2,77,06,332 பெண் வாக்காளர்கள், 7,191 இதர வாக்காளர்கள் என மொத்தம் 5 கோடியே 43 லட்சத்து 76 ஆயிரத்து 756 வாக்காளர்களின் பெயர்கள் வரைவுவாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

உயிரிழந்த வாக்காளர்கள் 26,95,672 பேர், இடம்பெயர்ந்தோர் மற்றும் குறிப்பிட்ட முகவரியில் வசிக்காத 66,44,881 பேர், இரட்டை பதிவு வாக்காளர்கள் 3,98,278 பேர் என மொத்தம் 97 லட்சத்து 37 ஆயிரத்து 831 வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. அதிகபட்சமாக சோழிங்கநல்லூர், பல்லாவரம், ஆலந்தூர் தொகுதிகளில் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

இந்த எஸ்.ஐ.ஆர். பணிகளின்போதே 5.19 லட்சத்துக்கும் மேற்பட்டோரிடம் இருந்து படிவம்-6 பெறப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறாதவர்கள் ஜனவரி 18 ஆம் திகதிக்குள் விண்ணப்பிக்கலாம், ஆட்சேபனைகளையும் வழங்கலாம்." என்று தெரிவித்துள்ளார்.

# மோசடி செய்த சூதாட்ட செயலிக்கு விளம்பரம்: கிரிக்கெட் வீரர்கள், நடிகர்கள் சொத்து முடக்கம்

இந்தியாவில் 1,000 கோடி இந்திய ரூபாவுக்கு மேல் மோசடியில் ஈடுபட்ட சூதாட்ட செயலிக்கு ஆதரவாக ஊடகங்களில் விளம்பரம் செய்த கிரிக்கெட் வீரர்கள் யுவராஜ் சிங், ராபின் உத்தப்பா, நடிகைகள் மிமி சக்ரவர்த்தி, நேகா சர்மா, நடிகர்கள் சோனு சூட், அங்குஷ் ஹஸ்ரா ஆகியோரது 7.93 கோடி இந்திய ரூபா மதிப்புள்ள சொத்துகளை அமலாக்கத் துறை முடக்கியுள்ளது.

சைரஸ் நாட்டை சேர்ந்த '1 எக்ஸ் பெட்' என்ற சூதாட்ட செயலிக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த செயலி சட்டவிரோதமாக இந்தியாவில் கால் பதித்தது. இதன் விளம்பர தூதர்களாக இந்தியாவின் முன்னணி நட்சத்திரங்கள் களமிறக்கப்பட்டனர். அவர்களது கவர்ச்சிகரமான விளம்பரங்களை நம்பி ஏராளமான இந்தியர்கள் இந்த செயலியில் பெரும் தொகையை இழந்தனர். இந்த செயலி வாயிலாக இந்தியாவில் சுமார் 1,000 கோடி இந்திய ரூபாவுகும் அதிகமாக மோசடி நடந்துள்ளது. இதுதொடர்பாக அமுலாக்கத் துறை வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது.

இந்த சூழலில், சூதாட்ட செயலிக்கு ஆதரவாக விளம்பரம் செய்த நட்சத்திரங்களிடம் அமுலாக்கத் துறை அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். அந்த வகையில், கிரிக்கெட் வீரர்கள் யுவராஜ் சிங், ராபின் உத்தப்பா, மேற்குவங்க நடிகை மிமி சக்ரவர்த்தி, பாலிவுட் நடிகை நேகா சர்மா, பாலிவுட் நடிகர் சோனு சூட், மேற்கு வங்க நடிகர் அங்குஷ் ஹஸ்ரா ஆகியோரிடம் கடந்த பல மாதங்களாக தீவிரவிசாரணை நடத்தப்பட்டது.

இதன் அடிப்படையில் அவர்களது 7.93 கோடி இந்திய ரூபா மதிப்புள்ள சொத்துகளை அமுலாக்கத் துறை முடக்கியுள்ளது. இதே வழக்கு தொடர்பாக கடந்த ஜூன் மாதம் கிரிக்கெட் வீரர்கள் ஷிகர் தவண், சுரேஷ் ரெய்னா ஆகியோரது 11.14 கோடி இந்திய ரூபா மதிப்புள்ள சொத்துகள் முடக்கப்பட்டன.

இதுகுறித்து அமுலாக்கத் துறை வட்டாரங்கள் கருத்து தெரிவிக்கையில்,

பாலிவுட் நடிகர் சோனு சூட்டுக்கு சொந்தமான 1 கோடி இந்திய ரூபா சொத்துகள், மிமி சக்ரவர்த்தியின் 59 லட்சம் இந்திய ரூபா, யுவராஜ் சிங்கின் 2.50 கோடி இந்திய ரூபா, நடிகை நேகா சர்மாவின் 1.26 கோடி இந்திய ரூபா, ராபின் உத்தப்பாவின் 47 லட்சம் இந்திய ரூபா, மேற்குவங்க நடிகர் அங்குஷ் ஹஸ்ராவின் 47 லட்சம் இந்திய ரூபா மதிப்புள்ள சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன. நடிகை ஊர்வசி ரவுடேலாவின் தாய்க்கு சொந்தமான 2.02 கோடி இந்திய ரூபா சொத்துகளும் முடக்கப்பட்டுள்ளன." என்று தெரிவித்தன.

# பங்களாதேஷில் இந்துக்கள்மீது வன்முறை; மாணவர் சங்கத் தலைவர் சுட்டுக் கொலை



பங்களாதேஷில் முக்கிய மாணவர் இயக்கத் தலைவரான ஷெரீப் உஸ்மான் ஹாடி சுட்டுக் கொல்லப்பட்டதை தொடர்ந்து, அங்கு இந்தியாவுக்கு எதிரான போராட்டம் தீவிரமடைந்துள்ளது. இந்து இளைஞர் ஒருவர் கும்பலால் அடித்துக் கொலை செய்யப்பட்டார். இந்துக்களை குறிவைத்து கலவரம் பரவுவதால் பதற்றம் அதிகரித்துள்ளது.

பங்களாதேஷ் அரசுக்கு எதிராக மாணவர் அமைப்புகள் கடந்த ஆண்டு நடத்திய போராட்டத்தில் வன்முறை வெடித்தது. இதையடுத்து, பிரதமர் பதவியில் இருந்து விலகிய ஷேக் ஹசீனா, நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சம் அடைந்தார். இதை தொடர்ந்து, பொருளாதார நிபுணரான முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

பங்களாதேஷில் 2026 பெப்ரவரி 12 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், டாக்கா-8 தொகுதி வேட்பாளராக ஷெரீப் உஸ்மான் ஹாடி (வயது 32) என்ற மாணவர் தலைவர் களமிறங்கினார். இன்கிலாப் மஞ்சா என்ற மாணவர் போராட்டக் குழுவின் மூத்த தலைவரான இவர், கடந்த ஆண்டு மாணவர் போராட்டத்தை வழிநடத்திய முக்கிய தலைவர்களில் ஒருவர்.

இந்நிலையில், டாக்காவில் கடந்த 12 ஆம் திகதி பிரச்சாரத்தை தொடங்கிய இவரை, முகமூடி அணிந்த மர்ம நபர்கள், தலையில் சுட்டனர். இதில் படுகாயம் அடைந்த அவருக்கு டாக்காவில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. இதில் முன்னேற்றம் இல்லாததால் கடந்த 13ஆம் திகதி விமானம் மூலம் சிங்கப்பூர் கொண்டு செல்லப்பட்டு, அங்கு உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி ஷெரீப் உஸ்மான் ஹாடி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

இந்த தகவல் வெளியானதை அடுத்து, கொலையாளிகளைக் கைது செய்யக் கோரி டாக்கா உட்பட பல்வேறு பகுதிகளிலும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர். பல பகுதிகளில் மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். 'புரோதோம் அலோ', 'டெய்லி ஸ்டார்' ஆகிய நாளிதழ் அலுவலகங்கள் தீவைத்துக் கொளுத்தப்பட்டன. சட்டேகிராம் பகுதியில் உள்ள இந்திய துணைத் தூதரக அலுவலகம் மற்றும் இந்திய துணை தூதரின் வீடு மீது சிலர் கல்வீசி தாக்கினர்.

இந்தியாவுக்கு எதிராகவும், அவாமி லீக் மற்றும் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு எதிராகவும் கோஷம் எழுப்பினர். பாதுகாப்புப் படையினர், கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி, அவர்களை தடுத்து நிறுத்தினர். அவாமி லீக் கட்சிக்கு சொந்தமான இடங்கள் மீதும் மாணவர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்துக்களை குறிவைத்தும் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், இந்து இளைஞர் ஒருவர் எரித்துக் கொலை செய்யப்பட்டார். மைமன்சிங் மாவட்டம் பலுகா பகுதியை சேர்ந்தவர் தீபு சந்திர தாஸ் (வயது 30). இவர் தங்களது மதத்தை அவமதித்ததாக கூறி 18ஆம் திகதி இரவு அவரை ஒரு கும்பல் அடித்துக் கொலை செய்து, உடலை தீ வைத்து எரித்தது. இது சிறுபான்மை இந்துக்கள் மத்தியில் பதற்றத்தை அதிகரித்துள்ளது. இந்து இளைஞர் கொலை செய்யப்பட்டதற்கு முகமது யூனுஸ் அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த கொடூரமான குற்றத்துக்கு பொறுப்பானவர்கள் யாராக இருந்தாலும், சட்டத்தின் முன்பு நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்கள்' என்று அரசு உறுதி அளித்துள்ளது. 'இந்த இக்கட்டான நேரத்தில், வன்முறை மற்றும் வெறுப்பை நிராகரிப்பதன் மூலம் தியாகி ஹாடிக்கு மரியாதை செலுத்துமாறு ஒவ்வொரு குடிமகனையும் கேட்டுக் கொள்கிறோம்' என்று அரசு தெரிவித்துள்ளது. ஹாடி உயிரிழப்பு காரணமாக, வங்கதேசத்தில் இன்று தேசிய துக்க நாளாக அனுசரிக்கப்படுகிறது. வங்கதேச தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹாடி மீது துப்பாக்கிச்சூடு நடத்தியவர்களை பங்களாதேஷ் பொலிஸ் தீவிரமாக தேடி வருகிறது. துப்பாக்கிச்சூடு நடத்தியவர்களை கைது செய்ய இந்தியாவின் உதவியையும் அந்நாட்டு அரசு நாடியுள்ளது. கலவரக்காரர்களை கண்டதும் சுடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷின் ஜலோகதி மாவட்டம் நல்சிட்டி பகுதியில் கடந்த 1994 இல் பிறந்த ஷெரீப் உஸ்மான் ஹாடி, இந்தியாவுக்கு எதிராக தீவிர நிலைப்பாடு கொண்டவராக இருந்தார். இந்தியப் பகுதிகளை உள்ளடக்கி 'அகண்ட வங்க தேசம்" உருவாக்கப்பட வேண்டும் என்று முழங்கி வந்தார்.

இதுதொடர்பான வரைபடங்களையும் பரப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கிடையே, ஹாடி உடல் நேற்று மாலை சிங்கப்பூரில் இருந்து டாக்கா கொண்டு வரப்பட்டது. இறுதிச் சடங்கு இன்று நடைபெறுகிறது. பங்களாதேஷில் இந்தியாவுக்கு எதிராக போராட்டங்கள் வெடித்துள்ள நிலையில், டில்லியில் உள்ள வங்கதேச தூதரகத்துக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# உக்ரைன் உடனான மோதலை முடிவுக்கு கொண்டுவர தயார்

## விளாடிமீர் புட்டின் தெரிவிப்பு



உக்ரைன் உடனான மோதலை, அமைதியான முறையில் முடிவுக்குக் கொண்டு வர தாம் தயாராக உள்ளதாக, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டின் தெரிவித்துள்ளார்.

இதற்கு உக்ரைன் நேட்டோவில் உறுப்பினராகும் முயற்சியை கைவிட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ரஷ்யா கைப்பற்றி தனக்குச் சொந்தமானது என்று உரிமை கொண்டாடும் நான்கு பிரதேசங்களிலிருந்தும் உக்ரைன் படைகள் விலக வேண்டும் எனவும் புட்டின் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இந்த ஆண்டு இறுதிக்குள் ரஷ்யா புதிய வெற்றிகளைக் காணும் என தான் உறுதியாக நம்புவதாகவும் புட்டின் கூறியுள்ளார்.

உக்ரைன் எல்லை முழுவதும் ரஷ்ய இராணுவம் முன்னேறி வருகின்ற அதேவேளை, உக்ரைன் படைகள் பின்வாங்குதையும் அவதானிக்க முடிவதாக ரஷ்ய ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள்- 20.12.2025




உங்கள் அணுகுமுறையில் யதார்த்தமும் ஒழுங்குமுறையும் தேவை. பயணம் காணப்படுகின்றது. இசை விழாக்களில் பங்கு கொள்வதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது மிகவும் கவனம் தேவை. உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும். அதன் மூலம் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை திறம்பட ஆற்ற முடியும்.

உங்கள துணையுடன் பேசும் போது கவனமாக இருக்க வேண்டும். கவனமற்ற வார்த்தைகள் காரணமாக பாதிப்புகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பேசுவதற்கு முன் விளைவுகளை யோசித்து பேச வேண்டும்.




உங்கள் கடின உழைப்பு மூலம் இன்று வெற்றி கிடைக்கும். உங்கள் சுய முன்னேற்றத்தின் மூலம் நீங்கள் கடினமாக உழைத்து வெற்றியை அடையலாம். இன்று நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்துக் கொண்டு அதற்கு முயற்சி செய்வீர்கள்.

பணிநிமித்தமான பயணம் காணப்படும். இது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கும் சேமிப்பதற்கும் பணம் கிடைக்கும் அதிர்ஷ்டம் இன்று காணப்படுகின்றது.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.




இன்று அமைதி காணப்படும். இன்றைய நாளின் விளைவுகள் உங்களுக்கு திருப்தியை அளிக்கும். உங்களிடம் மன நிறைவு காணப்படும்.

நீங்கள் தன்னம்பிக்கையுடன் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் பணி செய்யும் முறை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் அன்பாகவும் அனுசரணையாகவும் நடந்து கொள்வீர்கள். பரஸ்பர புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் காணப்படும்.

பயனுள்ள சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உங்களிடம் காணப்படும் மன மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் செயல்களில் எச்சரிக்கையும் பொறுமையும் தேவை. இன்று சிலவிதமான இழப்புகளை சந்திக்க நேரலாம். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகள் நிலுவையில் இருக்கும். பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை தரமாக முடித்துக் கொடுக்க திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படலாம். வன்மையாக நடந்து கொள்ளலாம். எனவே மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்த்தல் நல்லது.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று அதிகம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். தேவையற்ற செலவுகளின் கவலையும் இன்று காணப்படும்.இன்று வயிறு உப்பச பாதிப்பு ஏற்படலாம்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைப்பது அரிது. உங்கள் மனதை அமைதியாக வைத்துக்கொள்ள வேண்டும். நடந்து செல்லும் போதும் அல்லது பயணத்தின் போதும் காயம் ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச தயங்குவீர்கள். அவரால் புறக்கணிக்கப் படுவதாக திடமாக நம்புவீர்கள்.பணப்புழக்கம் குறைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று அடிப்படை தேவைகளை சமாளிப்பதும் நிதிநிலையை சமாளிப்பதும் கடினமாக உணர்வீர்கள்.




இன்று மகிழ்ச்சியாக இருக்கும் சூழ்நிலை காணப்படும். உங்கள் எண்ணங்களிலும் செயல்களிலும் அது பிரதிபலிக்கும். தியானம் மேற் கொள்வதன் மூலம் மன ஆறுதல் கிடைக்கும்.

இன்று புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். ஆது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக செய்வதற்கான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நேர்மையாக பழகு வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிவளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள். இது உங்கள் நிதிநிலையை மேம்படுத்தும்.




இன்று உங்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். உங்கள் பாதையில் நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரும். மாறும் சூழ்நிலைகளுக்கேற்ப உங்களை மாற்றிக் கொண்டால் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள் சக பணியாளர்களுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினைகள் காணப்படும். இது பணியிடச் சூழலை பாதிக்கும்.உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியான அணுகுமுறை மூலம் நல்லுறவை வளர்க்க முடியும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று உங்கள் செயல்களை நேர்மையாகவும் நாணயமாகவும் செய்ய வேண்டும். கொள்கைகளில் தளராமல் நடுநிலையோடு இருக்க வேண்டும். இல்லையெனில் உங்க ளுக்கெதிரான சூழ்நிலை ஏற்பட லாம். இன்று அமைதியாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகளை திறமையுடன் கையாளும் உறுதி குறைந்து காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைகாது. உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடம் நீங்கள் இன்று வன்மையாக நடந்து கொள்ள நேரலாம். மகிழ்ச்சியாக இருக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

# இன்றைய ராசி பலன்கள்- 20.12.2025




இன்று ஆன்மீக செயல்களில் ஈடுபடுவீர்கள். பக்திப் பாடல்கள் கேட்டு மன ஆறுதல் பெறுவீர்கள். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் இருப்பீர்கள்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உங்களின் மாறுபட்ட மனநிலையைக் காண்பிப்பீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள்.




இன்று உற்சாகமான நாளாக இருக்கும். உங்களிடம் ஆர்வம், விருப்பம் வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கை காணப்படும். இன்று உங்கள் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படுகின்றது. புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள துணையுடன் பக்குவமான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். குடும்ப வளர்ச்சி குறித்து உங்கள் துணையுடன் கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். இதனை நீங்கள் பயனுள்ள நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.




உங்கள் தகவல் பரிமாற்ற திறமை காரணமாக இன்று நீங்கள் வெற்றி பெறுவீர்கள். ஆன்மீக சொற்பொழிவுகளை கேட்பது பக்திப் பாடல்களை கேட்பது போன்ற விஷயங்களில் ஈடுபடுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும்.

உங்கள துணையுடன் அன்பும் அனுசரனையுமாக நடந்து கொள்வீர்கள். குடும்பப் பிரச்சினை பற்றி மனம் திறந்து பேசுவீர்கள். அதனால் திருப்தியாக உணர்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு தேவையான பணம் இன்று காணப்படுகின்றது . இதனை நீங்கள் ஆன்மீக காரியங்களுக்கு பயன்படுத்தலாம்.

இன்று நீங்கள் ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. ஆன்மீக நோக்கத்திற்காண பயணம் ஒன்றை மேற்கொள்ள நேரும். சில கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் நீங்கள் கூடுதல் பொறுப்புகளை ஏற்க நேரலாம்.

குடும்பப்ப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அதனை நீக்கி பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள வேண்டும்.

பயணத்தின்போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவரின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.

# வடக்கில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி தமிழில்; பரீட்சை ஆங்கிலத்தில்!

## *கல்வி அபிவிருத்திக் குழுமக் காப்பாளர் கவலை*

(த.சுபேசன்)

வடக்கு மாகாணத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ரேஞுடு-5 பயிற்சி தமிழ் மொழியிலும், பரீட்சை ஆங்கில மொழியிலும் நடைபெறவிருப்பதால் ஆசிரியர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என கல்வி அபிவிருத்திக் குழுமத்தினுடைய காப்பாளர் நடராசா சச்சிதானந்தன் கவலை வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-



வடக்கு மாகாணத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ரேஞுடு- 5 பயிற்சியானது கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் நிதிப்பங்களிப்புடன் யாழ்ப்பாண தொழில்நுட்பவியல் கல்லூரியில் தமிழ் மொழியில் வழங்கப்பட்டு வருகின்றது.

ஆனால், அவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் மாதம் ஆங்கில மொழியில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் மேற்படி தொழிற் கல்லூரியில் பயிற்சி பெற்று வருகின்ற முன்பள்ளி ஆசிரியர்கள் உள ரீதியாக பாதிப்படைந்துள்ளனர். இது தொடர்பாக முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பாதிப்பு இல்லாத விதமாக

அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் வடக்கு மாகாணத்தில் ஆயிரக்கணக்கான முன்பள்ளி ஆசிரியர்கள் உள்ள போதிலும் அதில் பெரும்பாலானவர்கள் உரிய கல்வித் தகுதியைப் பூர்த்தி செய்யாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

அதனைக் கருத்திற் கொண்டு கல்வி அபிவிருத்தி குழுமம், நிதி அனுசரணை வழங்கி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். வவுனியா பல்கலைக்கழகம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்கள் ஊடாக டிப்ளோமா பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

எனவே இவ்வாறு தமிழ் மொழியில் பயிற்சி பெறுகின்ற ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழியில் பரீட்சை நடத்துவது அவர்களை மன ரீதியாகப் பாதிக்கும். - என மேலும் அவர் சுட்டிக்காட்டினார்.